# தினபூமி

thinaboomi.com

பூமி: 23 சுற்று: 275 ஆவணி 15

புதுச்சேரி, ஞாயிறு, ஆகஸ்ட் 31, 2025 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00




**அனைத்து பிரச்சினைகள் குறித்தும் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பாகிஸ்தான் தயார் வெளியுறவு அமைச்சர் இஷாக் தகவல்**

....2-ம் பக்கம்

**இந்தியாவுக்கு நிரந்தர நண்பர்களோ, எதிரிகளோ இல்லை: ராஜ்நாத்சிங்**

....3-ம் பக்கம்

**பெங்களூரு கூட்ட நெரிசல் சம்பவம்: உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு நிதியுதவி அறிவித்த ஆர்.சி.பி. அணி**

....6-ம் பக்கம்





● தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக அரசு முறை பயணமாக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை விமான நிலையத்திலிருந்து ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு புறப்பட்டார். உடன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, மு.பெ.சாமிநாதன், பி.மூர்த்தி, தங்கம் தென்னரசு, எம்.பி.க்கள் டி.ஆர்.பாலு, ஆ.ராசா, தயாநிதி மாறன், ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உடனிருந்தனர்.

### ஒருவாரகால அரசு முறை பயணமாக

# தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஜெர்மனி, இங்கிலாந்து பயணம்

## புதிய தொழில் முதலீடுகளை ஈர்க்க திட்டம்

சென்னை, ஆக. 31-

**`ஒருவாரகால பயணமாக ஜெர்மனி, இங்கிலாந்து செல்கிறேன். இந்த பயணத்தில் தமிழ்நாட்டை நோக்கி தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காகவும், புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.**

**ஜெர்மன் பயணம்....**

தமிழகத்துக்கு முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதல்வர் ஸ்டாலின் நேற்று காலை விமானத்தில் ஜெர்மனிக்கு புறப்பட்டுச் சென்றார். முதல்வரின் மனைவி துர்கா ஸ்டாலின், முதல்வரின் செயலர்கள், பாதுகாப்பு அதிகாரிகளும் முதல்வர் உடன் செல்கின்றனர். நேற்று இரவு 9 மணிக்கு ஜெர்மனி சென்றடைந்த அவருக்கு அயலக தமிழர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

**இங்கிலாந்துக்கு...**

அங்கு முதலீட்டாளர்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று (ஆக.31) சந்திக்கிறார். ஜெர்மனி பயணத்தை முடித்துக்கொண்டு, செப்.1-ம் தேதி இங்கிலாந்து தலைநகர் லண்டனுக்கு புறப்படுகிறார்.

**தொழில் முதலீடுகள்...**

இந்த நிலையில், சென்னை விமான நிலையம் செல்வதற்கு முன்பாக பத்திரிகையாளர்களை சந்தித்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

> **2021-ல் திமுக ஆட்சிப் பொறுப்பேற்றப் பிறகு இதுவரை 10 லட்சத்துக்கு 62 ஆயிரத்து 752 கோடி ரூபாய்க்கான முதலீடுகளை ஈர்த்து 922 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. இதன் மூலம் தோராயமாக 32 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.**
>
> **- முதல்வர் மு.க.ஸ்டாலின்**

அப்போது அவர் பேசியதாவது: "ஒருவாரகால பயணமாக ஜெர்மனி, இங்கிலாந்து செல்கிறேன். இந்த பயணத்தில் தமிழ்நாட்டை நோக்கி தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காகவும், புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**922 ஒப்பந்தங்கள்...**

2021-ல் திமுக ஆட்சிப் பொறுப்பேற்றப் பிறகு இதுவரை 10 லட்சத்துக்கு 62 ஆயிரத்து 752 கோடி ரூபாய்க்கான முதலீடுகளை ஈர்த்து 922 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. இதன் மூலம் தோராயமாக 32 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் பல நிறுவனங்கள் தயாரிப்பை தொடங்கிவிட்டன. இதன் மூலம் வளர்ச்சி வந்திருக்கிறதா என்று கேட்பவர்களுக்கு, ஒன்றிய அரசு வெளியிடும் புள்ளிவிவரங்களே சாட்சி.

**ரூ.18,498 கோடிக்கான**

என்னுடைய ஒவ்வொரு வெளிநாட்டு பயணத்திலும் தரவுகளை எடுத்துச் சொல்லி தமிழ்நாட்டில் முதலீடு செய்ய அழைப்பு விடுத்திருக்கிறேன். ஐக்கிய அரபு அமீரகம், அமெரிக்கா, ஸ்பெயின், ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய ஐந்து நாடுகளுக்கு நான் சென்று வந்ததன் மூலம் ரூ.18,498 கோடிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தமிழ்நாட்டுக்கு கிடைத்துள்ளன.

புதிய முதலீடுகளை...

நாட்டிலேயே அதிவேகமான வளர்ச்சிப் பணிகள் நடைபெறக்கூடிய தமிழ்நாட்டை நோக்கி புதிய முதலீடுகளை ஈர்க்க நான் ஜெர்மனி, இங்கிலாந்துக்கு செல்கிறேன். அதற்கு உங்கள் வாழ்த்துகள் எனக்கு வேண்டும். தமிழ்நாட்டு மக்களின் அன்புடன் நான் புறப்பட்டுச் செல்கிறேன்" இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

### அமெரிக்கா 50 சதவீதம் வரியால் பாதிக்கப்படும்

# ஏற்றுமதி துறைகளை பாதுகாத்திட புதிய கொள்கை வகுக்க வேண்டும்

## மத்திய அரசுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்

சென்னை, ஆக. 31-

**அமெரிக்கா 50 சதவீதம் வரியால் பாதிக்கப்படும் ஏற்றுமதி துறைகளை பாதுகாத்திட புதிய கொள்கை வகுக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

அமெரிக்காவில் டிரம்ப் நிர்வாகம் விதித்த 50 சதவீத சுங்கவரி கடந்த 7-ம் தேதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இதன் மூலம், இந்தியாவின் ஏற்றுமதி சார்ந்த தொழில்கள் பெரும் அச்சத்தில் சிக்கியுள்ளன. உற்பத்தி மற்றும் மென்பொருள் துறைகளில் இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாடு, அமெரிக்காவைத் தனது மிகப்பெரிய ஏற்றுமதி சந்தையாகக் கொண்டுள்ளது.

கடந்த நிதியாண்டில், தமிழ்நாட்டின் பொருள்கள் ஏற்றுமதியில் 31 சதவீதம் அமெரிக்காவிற்கே சென்றது. இந்தியா முழுவதும் அது 20 சதவீதம் மட்டுமே. எனவே, அமெரிக்காவின் வர்த்தகக் கொள்கையில் தற்போது ஏற்பட்டுள்ள இந்த மாற்றம் தமிழ்நாட்டை அதிகம் பாதிக்கிறது.

அமெரிக்க அரசின் இந்த வரி உயர்வுபோல் முன்பு எப்போதும் ஏற்பட்டதில்லை. இதனால் அனைத்துத் துறைகளின் ஏற்றுமதியாளர்களிடமும் அச்சம் நிலவுகிறது. கடும் சுங்கவரி உயர்வுகள் ஏற்கனவே பெறப்பட்ட பல ஆர்டர்கள் ரத்து செய்யப்பட காரணமாகியுள்ளன. இந்த உயர்வுகள் எங்கள் தயாரிப்புகளை உலகளவில் போட்டியிட முடியாதவையாக மாற்றியுள்ளன.

இந்த கடின சூழ்நிலையில் மத்திய அரசின் பதில் நடவடிக்கை போதுமானதாக இல்லை. தமிழ்நாடு அரசு தன்னால் இயன்றதைச் செய்து கொண்டிருந்தாலும், ஒரு மாநில அரசால் செய்யக் கூடியவற்றுக்கு வரம்புகள் உள்ளன. எனவே, மத்திய அரசு தன் பங்கை உணர்ந்து, குறிப்பாகத் துணிநூல் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து, இந்தியாவின் ஏற்றுமதித் துறைகளைப் பாதுகாக்க ஒற்றுமையான கொள்கை வடிவமைப்பை முன்வைக்க வேண்டுமென வலியுறுத்துகிறோம்.

தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனம் நடத்திய பகுப்பாய்வுப்படி, அமெரிக்காவின் 50 சதவீத சுங்கவரி விதிப்பால் மாநிலத்தின் கணிக்கப்பட்ட இழப்பு 3.93 பில்லியன்

(கடைசி பக்கம் பார்க்க)

### முதல்வர் மு.க.ஸ்டாலினின் 51 மாத கால ஆட்சியில்

# இதுவரை மொத்தம் 1.85 கோடி மெட்ரிக் டன் நெல் கொள்முதல்

## தமிழ்நாடு அரசு தகவல்

சென்னை, ஆக. 31-

**முதல்வரின் 51 மாத கால ஆட்சியில் இதுவரை மொத்தம் 1.85 கோடி மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு 44 ஆயிரத்து 777 கோடியே 83 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.**

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:-

முதல்வர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாட்டில் வாழும் மக்களின் உணவுத் தேவையை நிறைவு செய்வதற்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டு உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளின் நலன்களைக் காப்பதே திராவிட மாடல் அரசின் உன்னத நோக்கங்களில் ஒன்று என்று விவசாயிகளுக்குத் தேவையான உதவிகளை வழங்கி வருகிறார்.

மத்திய அரசு 2025-2026-ம் ஆண்டிற்கான நெல் கொள்முதல் விலையை தற்போது நிர்ணயித்து உள்ளது. மத்திய அரசு நிர்ணயிக்கும் நெல் கொள்முதல் விலையைவிட விவசாயிகளுக்கு கூடுதல் விலை வழங்கும் திட்டத்தை கலைஞர் ஆட்சிக் காலத்தில் நடைமுறைப்படுத்தினார்.

கலைஞர் வழியில் தமிழ்நாட்டின் நலம் காத்து வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் மத்திய அரசு இந்த ஆண்டில் நிர்ணயம் செய்துள்ள சன்னரக நெல் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,389 என்பதை ரூ.2,545 என உயர்த்தி உள்ளார். அதேபோல, பொதுரக நெல் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,369 என்பதை ரூ.2,500 என உயர்த்தியுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் உயர்த்தி நிர்ணயித்துள்ள நெல் கொள்முதல் விலையில் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள நெல் கொள்முதல் நிலையங்களில் 1.9.2025 முதல் 31.8.2026 வரை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும்.

இதற்கான முதல்வர் பிறப்பித்துள்ள உத்தரவு 29-ந் தேதி அன்று அரசாணையாக வெளியிடப்பட்டுள்ளது. இந்த உத்தரவின்படி, இந்த ஆண்டில் விவசாயிகளிடமிருந்து மொத்தம் 42 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்படும். இதில் சன்ன ரக நெல் 30 லட்சம் மெட்ரிக் டன். பொதுரக நெல் 12 லட்சம் மெட்ரிக் டன்.

தமிழ்நாட்டின் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலினின் பொற்கால ஆட்சியில் 2024-2025 நெல் கொள்முதல் பருவத்தில் 47.97 லட்சம்

(கடைசி பக்கம் பார்க்க)

### புதிய ஜி.எஸ்.டி. வரி விகிதத்தால்

# தமிழகத்திற்கு ரூ.9,750 கோடி இழப்பு?

சென்னை, ஆக. 31-

**புதிய ஜி.எஸ்.டி. வரி விகிதத்தால் தமிழகத்திற்கு ரூ.9,750 கோடி இழப்பு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.**

மத்திய அரசு, தற்போது இருக்கும் 5,12,18,28 என்ற ஜி.எஸ்.டி. வரி விகிதங்களை 5, 18 என்ற இரட்டை விகிதங்களை கொண்டுவர உள்ளது. இது தொடர்பாக அடுத்த மாதம் நடைபெறும் ஜி.எஸ்.டி.கவுன்சில் கூட்டத்தில் அறிவிக்கப்பட உள்ளது.

இந்த புதிய ஜி.எஸ்.டி. வரி விகிதத்தால் தமிழகம் உள்பட ஒவ்வொரு மாநிலங்களுக்கும் 15 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை இழப்பு ஏற்படும் என்று தெரியவந்துள்ளது. அதனை டெல்லியில் நடந்த மாநில நிதி மந்திரிகள் கூட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது. அதன்படி பார்த்தால் தமிழகத்திற்கு வரும் ஜி.எஸ்.டி. வருவாயில் எவ்வளவு இழப்பு ஏற்படும்?. கடந்த 2024-25-ம் நிதியாண்டில் தமிழகத்தின் மொத்த ஜி.எஸ்.டி. வசூல் ரூ.1 லட்சத்து 30 ஆயிரம் கோடி ஆகும். அதில் மத்திய அரசும், மாநில அரசும் பாதி, பாதி பகிர்ந்து கொள்ளும்.

அப்படியென்றால் தமிழகத்திற்கு அதில் ரூ.65 ஆயிரம் கோடி கிடைக்கும். அதில் 15 சதவீதம் இழப்பு என்று எடுத்து கொண்டால் கூட ரூ.9,750 கோடி இழப்பு ஏற்பட்டு விடும். அதில் 20 சதவீதம் என்றால் ரூ.13 ஆயிரம் கோடி வரை இழப்பு ஏற்பட்டு விடும். ஒரு ஆண்டில் இவ்வளவு பெரிய இழப்பீடு ஏற்பட்டால் தமிழக அரசுக்கு கடுமையான நிதி சுமை ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஜப்பான் சுற்றுப்பயணம் நிறைவு;

# சீனா புறப்பட்டார் பிரதமர் மோடி

## ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் பங்கேற்கிறார்

டோக்கியோ, ஆக. 31-

**பிரதமர் மோடி தனது ஜப்பான் சுற்றுப்பயணத்தை நிறைவு செய்து, விமானம் மூலம் சீனா புறப்பட்டார். சீனாவின் தியான்ஜின் நகரில் ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு இன்று (ஞாயிற்றுக்கிழமை) மற்றும் 1-ந் தேதி என 2 நாட்கள் நடக்கிறது. இதில் பிரதமர் மோடி, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் உள்பட உலக தலைவர்கள் பங்கேற்கின்றனர்.**

பிரதமர் நரேந்திர மோடி 2 நாட்கள் சுற்றுப்பயணமாக ஜப்பான் நேற்று முன்தினம் சென்றார். அங்கு டோக்கியோவில் நடந்த இந்தியா-ஜப்பான் பொருளாதார மன்றத்தில் பங்கேற்று உரையாற்றிய பிரதமர் மோடி, இந்தியாவும், ஜப்பானும் இணைந்து இந்த நூற்றாண்டை நிலைத்தன்மை, வளர்ச்சி மற்றும் செழிப்பானதாக உருவாக்கும் என்று தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து ஜப்பான் பிரதமர் ஹிகேரு இஷிபாவை பிரதமர் மோடி சந்தித்து பேசினார். இந்தியா-ஜப்பான் இடையிலான 15-வது வருடாந்திர உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக இந்த சந்திப்பு நடைபெற்றது. அப்போது, இரு நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. தொடர்ந்து பிரதமர் மோடி நேற்று ஜப்பானில் உள்ள சுமார் 16 மாகாணங்களின் கவர்னர்களை சந்தித்து பேசினார்.

இந்த நிலையில், பிரதமர் மோடி தனது ஜப்பான் சுற்றுப்பயணத்தை நிறைவு செய்து, விமானம் மூலம் சீனா புறப்பட்டார். சீனாவின் தியான்ஜின் நகரில் ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு இன்று (ஞாயிற்றுக்கிழமை) மற்றும் 1-ந் தேதி என 2 நாட்கள் நடக்கிறது. இதில் பிரதமர் மோடி, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் உள்பட உலக தலைவர்கள் பங்கேற்கின்றனர். இந்த மாநாட்டை தொடர்ந்து ரஷ்ய அதிபரை பிரதமர் மோடி சந்தித்து பேச உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஓய்வுபெறும் நாளில் அரசு ஊழியர்கள் மீது சஸ்பெண்ட் நடவடிக்கை இனி கிடையாது

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு

சென்னை, ஆக. 31-

**ஓய்வு பெறும் நாளில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மீதான சஸ்பெண்ட் நடவடிக்கை இனி கிடையாது என்று விதிகளில் திருத்தம் செய்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.**

இதன்படி குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்கள் உரிய தேதியில் ஓய்வுபெற அனுமதிக்கப்படுவார்கள். குற்றச்சாட்டுகள் மீதான விசாரணை முடிவடைந்தபிறகே பணப்பலன்களைப் பெற முடியும். இதுவரை குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்களை ஓய்வுபெறும் நாளில் சஸ்பெண்ட் செய்யும் நடைமுறை பின்பற்றப்படுவதாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கடந்த 2021ம் ஆண்டு அக்டோபர் மாதம் அரசு ஊழியர்களை ஓய்வுபெறும் நாளில் ‘சஸ்பெண்ட்’ செய்யும் நடைமுறையை தவிர்ப்பதற்கான அரசாணையை தமிழ்நாடு அரசு வெளியிட்டது. இதுதொடர்பாக தமிழ்நாடு அரசின் மனிதவள மேலாண்மைத் துறை வெளியிட்ட அரசாணையில், அரசு ஊழியர்கள் தவறு செய்யும்நிலையில் அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்படும் பட்சத்தில், துறைரீதியான விசாரணை நடத்தப்பட்டு, தண்டனை வழங்கப்படுகிறது. சில வழக்குகளில் தவறு செய்பவர் மீதான விசாரணை நீண்டகாலம் செல்லும்போது, துறை ரீதியான ஒழுங்கு நடவடிகைக்காக அவர் தற்காலிக இடைநீக்கத்தில் (சஸ்பெண்ட்) வைக்கப்படுகிறார்.

இந்நிலையில் விசாரணையில் ஏற்படும் தாமதத்தை தவிர்க்க தமிழக அரசு சில வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. அதன்படி, துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் முன்னர், சம்பந்தப்பட்ட அரசு ஊழியர் மீதான குற்றச்சாட்டுக்களில் முகாந்திரம் உள்ளதா, மிகப்பெரிய தண்டனை, குறிப்பாக பணி நீக்கம் செய்வதற்கு உரியதா என்பது ஆய்வு செய்யப்பட வேண்டும். இதன் மூலம், தேவையற்ற தாமதம் தவிர்க்கப்படும். அரசு ஊழியர் ஒருவர் முறைகேட்டில் ஈடுபட்டது தெரியவந்தால், ஓய்வு பெறும் நாளில் பணியிடை நீக்கம் செய்வதை தவிர்த்து, 3 மாதங்களுக்கு முன்னதாகவே உரிய முடிவை எடுக்க வேண்டும்.

விசாரணை, நடவடிக்கை ஆகியவற்றுக்கு உரிய கால அளவை ஒழுங்கு நடவடிக்கை அதிகாரிகள் பின்பற்ற வேண்டும். சம்பந்தப்பட்ட அரசு ஊழியர்ஓய்வு பெறுவதைக் கருத்தில்கொண்டு அவருக்கு எதிரான குற்றச்சாட்டில் உரிய விளக்கத்தை அளிக்க வாய்ப்பு கொடுத்து, இயற்கை நியதிக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த செயல்பாடுகள் அனைத்தும் எழுத்துப்பூர்வமாக பதிவு செய்யப்பட வேண்டும்.

ஓய்வு பெறுவதற்கு முன்னரே அதாவது 3 மாதங்களுக்கு முன்னரே துறை ரீதியான நடவடிக்கைகளை முடிக்க வேண்டும். அவ்வாறு முடிக்க இயலாத பட்சத்தில், நடவடிக்கையில் நிர்வாக ரீதியான தாமதத்தைக் கருத்தில் கொண்டு அந்த அரசு ஊழியரை ஓய்வுபெற அனுமதிக்க வேண்டும். ஓய்வு பெறும் நாளுக்கு 3 மாதங்களுக்கு முன் ஏதேனும் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், போர்க்கால அடிப்படையில் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறு நடைபெற்றிருப்பது கண்டறியப்பட்டால் பணியிடை நீக்கம் செய்யலாம்.

முறைகேட்டில் ஈடுபட்ட அரசுஊழியர்கள் மீதான நடவடிக்கையை 3 மாதங்களுக்கு முன் முடிக்காமல் விசாரணை

(கடைசி பக்கம் பார்க்க)

thinaboomi.com
தினபூமி,
ஆகஸ்ட் 31, 2025


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| -270.92 | -74.05 |
| பாயின்ட் 79,809.65 | பாயின்ட் 24,426.85 |



**தங்கம்**
1 சவரன் ₹76,960
1 கிராம் ₹9,620



**வெள்ளி**
1 கிலோ ₹134,000
1 கிராம் ₹134.00

**டாலர்** ₹88.15



**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34


### அனைத்து பிரச்சினைகள் குறித்தும்

# இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பாகிஸ்தான் தயார்

## வெளியுறவு அமைச்சர் இஷாக் தகவல்

**இஸ்லமாபாத், ஆக. 31-**

காஷ்மீர் விவகாரம் உள்பட அனைத்து பிரச்சினைகள் குறித்தும் இந்தியாவுடன் கண்ணியமான முறையில் பேச்சுவார்த்தை நடத்த பாகிஸ்தான் தயாராக உள்ளது" என்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் இஷாக் தார் கூறியுள்ளார்.



பகல்ஹாம் பயங்கரவாத தாக்குதலையடுத்து பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது இந்தியா வான்வழி தாக்குதல் நடத்தியது.

ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் இந்தியா எடுத்த இந்த நடவடிக்கையால் அதிர்ச்சி அடைந்த பாகிஸ்தான், இந்தியாவில் எல்லையோர கிராமங்களை குறிவைத்து தாக்க முற்பட்டது.

பாகிஸ்தானின் இந்த அத்துமீறிய செயலை இந்தியா தனது வான்பாதுகாப்பு அமைப்பு மூலம் முறியடித்தது. மூன்று நாட்களுக்கும் மேலாக இருநாடுகளுக்கும் மேலாக நீடித்த மோதல் பாகிஸ்தான் கேட்டுக்கொண்டதையடுத்து முடிவுக்கு வந்தது.

சண்டை நிறுத்தம் ஏற்பட்டாலும் பாகிஸ்தானுக்கு தக்க பாடம் புகட்ட திட்டமிட்ட இந்தியா, அந்நாட்டுக்கு எதிரான அனைத்து உறவுகளையும் துண்டித்தது. சிந்து நதி நீர் ஒப்பந்தத்தையும் ரத்து செய்வதாக அறிவித்தது. இதனால், அரண்டு போயுள்ள பாகிஸ்தான், இந்தியாவிடம் பேச்சுவார்த்தைக்கு வர தயாராக இருப்பதாக கூறி வருகிறது.

இந்த நிலையில், பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் இஷாக் தார் நேற்று பேசுகையில், இந்தியாவுடன் பேச்சுவார்த்தைக்கு தயார் எனக்கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில், " காஷ்மீர் விவகாரம் உள்பட அனைத்து பிரச்சினைகள் குறித்தும் இந்தியாவுடன் கண்ணியமான முறையில் பேச்சுவார்த்தை நடத்த பாகிஸ்தான் தயாராக உள்ளது" என்று கூறியுள்ளார்.




தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக அரசு முறைப் பயணமாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சென்னை விமான நிலையத்திலிருந்து ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு புறப்பட்டார்.

### ட்ரம்ப்பின் வரிகளை ரத்து செய்து

# அமெரிக்க மேல்முறையீட்டு நீதிமன்றம் அதிரடி உத்தரவு

**வாஷிங்டன், ஆக. 31-**

அமெரிக்க காங்கிரஸின் (நாடாளுமன்றத்தின்) ஒப்புதல் இன்றி பல்வேறு நாடுகள் மீது அதிக வரிகளை விதித்த ட்ரம்ப்பின் உத்தரவுகளை அமெரிக்க மேல்முறையீட்டு நீதிமன்றம் ரத்து செய்துள்ளது. நீதிமன்றத்தின் இந்த உத்தரவுக்கு ட்ரம்ப் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், உலகின் பல்வேறு நாடுகளுக்கு எதிராக கடும் இறக்குமதி வரிகளை விதித்துள்ளார். அமெரிக்கப் பொருட்களுக்கு அதிக வரி விதிக்கும் நாடுகளுக்கு எதிராக பரஸ்பர வரி விதிப்புக் கொள்கையை அமெரிக்கா கடைப்பிடிக்கும் என அறிவித்த டொனால்ட் ட்ரம்ப், கனடா, மெக்ஸிகோ உட்பட பல்வேறு நாடுகளுக்கு எதிராக கடும் வரிகளை விதித்தார்.

தனது இந்த முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்ததால் சீனா மீதான வரியை ட்ரம்ப் பல மடங்கு உயர்த்தினார். பின்னர், சீனாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வரி விகிதத்தைக் குறைத்தார்.

இந்திய பொருட்களுக்கு ஏற்கெனவே 25 சதவீத வரி விதித்த ட்ரம்ப், ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதை காரணம் காட்டி கூடுதலாக 25 சதவீதம் வரியை விதித்து அதனை 50 சதவீதமாக உயர்த்தினார். ட்ரம்ப்பின் இத்தகைய நடவடிக்கைகளால் அமெரிக்காவுக்கான இறக்குமதி பாதிக்கப்படும், உள்நாட்டில் பொருட்களின் விலை உயரும், நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்று அமெரிக்க மக்களில் பலர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

ட்ரம்ப்பின் வரி விதிப்பு முடிவுகளுக்கு எதிராக கடந்த மே மாதம் நியூயார்க் வர்த்தக நீதிமன்றம் உத்தரவுகளை பிறப்பித்திருந்தது. இந்நிலையில், அமெரிக்க கூட்டாட்சி மேல்முறையீட்டு நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், "உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டுக்கு எதிராகவும் ட்ரம்ப் அதிக வரிகளை விதித்துள்ளார். இதை நியாயப்படுத்தவே, தேசிய அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளது. ட்ரம்ப்பின் பெரும்பாலான வரிவிதிப்பு சட்டவிரோதமானது. கூடுதல் வரி விதிப்பை நீக்க வேண்டும்.

வரிகள் விதிப்பு, அடிப்படையில் காங்கிரஸின் அதிகாரத்துக்கு உட்பட்டது. அது வரி விதிப்பில் அதிபருக்கு சில அதிகாரங்களை வழங்கி உள்ளது. எனினும், வரம்பற்ற அதிகாரத்தை அதிபருக்கு காங்கிரஸ் வழங்கவில்லை. அத்தகைய நோக்கத்தை காங்கிரஸ் கொண்டிருக்கவில்லை." என்றும் நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

நியூயார்க் வர்த்தக நீதிமன்றத்தின் தீர்ப்பை, ஏறக்குறைய உறுதி செய்துள்ள கூட்டாட்சி மேல்முறையீட்டு நீதிமன்றம், அதேநேரத்தில், மேல்முறையீட்டுக்கு அக்டோபர் 14 வரை கால அவகாசமும் அளித்துள்ளது.

இந்த தீர்ப்பு, ட்ரம்ப்புக்கு பெரும் பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது. இந்த தீர்ப்பை அமெரிக்க உச்ச நீதிமன்றம் உறுதிப்படுத்துமானால், கூடுதல் வரி விதிப்பின் மூலம் பெறப்பட்ட பணத்தை திருப்பி தர வேண்டிய நிலை ஏற்படும் என கூறப்படுகிறது.

இதனிடையே, நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு டொனால்ட் ட்ரம்ப் அதிருப்தி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில், "அனைத்து வரி விதிப்புகளும் தொடர்ந்து நடைமுறையில் உள்ளன. இந்த வரிகள் நீக்கப்பட்டால் அது நாட்டுக்கு ஒரு முமையயான பேரழிவாக இருக்கும். இந்த தீர்ப்பு உறுதிப்படுத்தப்படுமானால் அது அமெரிக்காவை அழித்துவிடும்." என்று கடுமையாக விமர்சித்துள்ளார்.

### கம்போடியா தலைவருடனான உரையாடல்:

# தாய்லாந்து பிரதமர் பதவிநீக்கம்

**பாங்காக், ஆக. 31-**

பதவியில் நீடிப்பதற்கான தகுதியை இழந்துவிட்டதாகக் கூறி, அரசியல் சாசன நீதிமன்றம் ஷினவத்ராவை பதவி நீக்கம் செய்து உத்தரவிட்டது.

தாய்லாந்து, கம்போடியா இடையே எல்லைப் பிரச்சினை நீடித்து வருகிறது. இதனிடையே, தாய்லாந்து பிரதமர் பேதோங்தான் ஷினவத்ரா கம்போடியா முன்னாள் பிரதமரும் அந்நாட்டு செனட் சபையின் தலைவருமான ஹுன்சென் உடன் கடந்த ஜூன் 15-ம் தேதி தொலைபேசியில் பேசிய உரையாடல் கசிந்தது.

அந்த உரையாடலில் அரசியல் சாசனத்துக்கு புறம்பாக தாய்லாந்து ராணுவ தளபதியை அவம் திக்கும் வகையிலான கருத்துகள் இடம்பெற்றதாகக் கூறி ஷினவத்ராவுக்கு எதிராக போராட்டம் வெடித்தது. இது தொடர்பாக அரசியல் சாசன நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இதையடுத்து ஜூலை 1-ம் தேதி ஷினவத்ரா பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

இந்நிலையில், பதவியில் நீடிப்பதற்கான தகுதியை இழந்துவிட்டதாகக் கூறி, அரசியல் சாசன நீதிமன்றம் ஷினவத்ராவை பதவி நீக்கம் செய்து உத்தரவிட்டது.

### இந்தியா மீதான அமெரிக்காவின் வரி விதிப்பு:

# அமெரிக்க பொருளாதார நிபுணர் கருத்து

**மாஸ்கோ, ஆக. 31-**

இந்திய பொருட்கள் மீதான அமெரிக்காவின் வரி விதிப்பு, யானையோடு எலி மோதுவது போன்றது என்று அமெரிக்க பொருளாதார நிபுணர் ரிச்சர்ட் வுல்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் ஆம்ஹெர்ஸ்ட் பல்கலைக்கழகத்தின் பொருளாதார துறை பேராசிரியர் ரிச்சர்ட் வுல்ப் (83). அமெரிக்காவின் மிகச் சிறந்த பொருளாதார நிபுணர்களில் ஒருவரான அவர், ரஷ்யா டுடே தொலைக்காட்சி சேனலுக்கு சிறப்பு பேட்டி அளித்துள்ளார். அதில் கூறியிருப்பதாவது:

ஒரு காலத்தில் அமெரிக்கா உலக வல்லரசாக விளங்கியது உண்மைதான். ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது. ஜி7 கூட்டமைப்பைவிட பிரிக்ஸ் கூட்டமைப்பு மிகவும் வலுவாக இருக்கிறது.

ஜி7 அமைப்பில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, கனடா, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகள் உறுப்பினராக உள்ளன. சர்வதேச அளவில் இந்த 7 நாடுகளின் பொருளாதாரம் 28 சதவீதமாக உள்ளது. அதேநேரம் ரஷ்யா, சீனா, இந்தியா ஆகிய 10 நாடுகளின் கூட்டமைப்பான பிரிக்ஸின் பொருளாதாரம் 35 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. உலகின் பொருளாதார மையமாக பிரிக்ஸ் உருவெடுத்திருக்கிறது.

அமெரிக்காவின் நடவடிக்கைகளால் பிரிக்ஸ் கூட்டமைப்பு நாளுக்கு நாள் வலுவடைந்து கொண்டே செல்கிறது. உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக இந்தியா விளங்குகிறது.

இந்திய பொருட்கள் மீதான அமெரிக்காவின் வரி விதிப்பு, யானையோடு எலி மோதுவது போன்றது ஆகும். இந்தியாவுடன் மோதல் போக்கை கடைபிடிப்பதன் மூலம் அமெரிக்கா தனது காலில் தானே சுட்டுக் கொண்டிருக்கிறது.


மத்திய கிழக்கில் உள்ள சிறிய நாடுகளான சிரியா, லெபனானோடு அமெரிக்காவால் மோத முடியும். இது போன்ற சிறிய நாடுகளுடன் மோதுவதால் அமெரிக்காவுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. ஆனால் இதே அணுகுமுறையை இந்தியாவுடன் கடைபிடிக்க முடியாது. உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட மிகப்பெரிய ஜனநாயக நாடாக இந்தியா விளங்குகிறது.

ஆரம்ப காலம் முதலே இந்தியா, ரஷ்யா இடையே ஆழமான நட்புறவு நீடிக்கிறது. அமெரிக்க அதிபர் ட்ரம்பின் நடவடிக்கைகளால் இந்தியா, ரஷ்யா இடையிலான உறவு மேலும் வலுவடைந்து வருகிறது.

மேற்கத்திய நாடுகளுக்கு பிரிக்ஸ் கூட்டமைப்பு மிகப்பெரிய சவாலாக உருவெடுத்திருக்கிறது. அமெரிக்க அதிபர் ட்ரம்பின் தவறுகள் வரலாற்றில் பதிவு செய்யப்படும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

**31-08-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** நேர்மையாக நடக்க வேண்டிய நாள். கோபத்தால் குழப்பங்கள் ஏற்படலாம். மனைவியின் செயலால் உறவுகள் பகையாகும். அதிகாரிகளிடம் பணிவாக நடத்தல் அவசியம்.

**ரிஷபம்:-** ஆரோக்கியம் மேம்படும். தன லாபம் அதிகரிக்கும். வியாபாரத்தில் இலாபமும், மணவாழ்க்கை மகிழ்ச்சியும் ஏற்படும். பெரிய மனிதன் என்ற பெயரும் ஏற்படும். ஆடை, ஆபரணங்கள் சேரும்.

**மிதுனம்:-** எல்லா நலன்களும் உண்டாகும். தனவரவு கூடும். எதிரிகள் மறைவர். பெயரும், புகழும் உண்டாகும். புதுப் பெண்ணின் சிநேகமும், தனக்கென ஒரு தனி வீடும் ஏற்படும்.

**கடகம்:-** மனைவி, குழந்தைகள் மூலம் மருத்துவச் செலவு ஏற்படலாம். பயணம் மற்றும் கல்வியில் தடைகள் ஏற்படலாம். வெற்றிக்கு வழி இல்லாத வகையில் ஏமாற்றங்களும் ஏற்படும்.

**சிம்மம்:-** அன்னையை அனுசரித்துச் செல்வது நல்லது. திறமை குறைவால் பணியிடத்தில் ஒருவித பயந்த நிலையில் இருப்பார்கள். காரியத் தடைகள் ஏற்படும். நீர்நிலைகளில் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

**கன்னி:-** இன்று, வெற்றி மேல் வெற்றி, அதிக தனலாபம், புதிய நண்பர்கள், எதிர்பாலர் பால் ஈர்ப்பு மற்றும் இன்பமும் ஏற்றங்களும் ஏற்படும். மனத்தெம்பும் மகிழ்ச்சியும் நிலவும்.

**துலாம்:-** இன்று, எல்லாவற்றிலும், எல்லோரையும் சந்தேகப்படும் குணம் ஏற்படும். மனக் கவலை மற்றும் சந்தோஷ மற்ற வாழ்க்கை அமையும். பயந்த நிலையும் ஏற்படும்.

**விருச்சிகம்:-** ராஜயோகம் தரும். நல்ல வாகன யோகம், நல்ல வருமானம் மற்றும் உறவுகளை சந்திப்பதால் ஏற்படும் மனமகிழ்ச்சி ஆகியவை ஏற்படும். இனிய பயணங்கள் இன்பம் தரும்.

**தனுசு:-** அதிக பணியின் காரணமாக நேரத்துக்குக்கு உணவருந்த முடியாது. கோபத்தை அடக்க முன்னேற்றம் ஏற்படும். குறிக்கோளற்ற அலைச்சல்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**மகரம்:-** பலவகைகளிலும் பண வருமானம் வந்து குவியும். திருமண ஏற்பாடுகள் நடக்கும். வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். நண்பர்கள் சந்திப்பு நலம் தரும்.

**கும்பம்:-** மகிழ்ச்சி நிறைந்த நாளாக அமையும். விரும்பிய பொருட்கள் வீடு வந்து சேரும். ஆணையிடும் அதிகார பதவி கிடைத்து, அந்தஸ்தும் உயரும்.. அன்பளிப்புக்கள் பெறுவீர்கள்.

**மீனம்:-** சுகம் சந்தோஷம் கூடும். தெய்வீக ஈடுபாட்டால் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அரிய சாதனைகள் புரிந்து புகழடைவீர்கள். புதிய நகைகள் மற்றும் செல்வம் சேரும். வெளிநாடு செல்ல சாதகமான காலம்.

# தெரு நாய்களை விரட்ட மாணவர்கள் கண்டுபிடித்த 'மந்திரக்கோல்' - தேசிய அங்கீகாரம் கிடைத்தது

**திருவனந்தபுரம்,ஆக. 31-**

கேரளா, தமிழகம் உள்ளிட்ட அனைத்து மாநிலங்களிலும் தெருநாய்கள் தொல்லை மிகவும் அதிகமாக உள்ளது. இதனால் தெருவில் நடந்துசெல்லும் பாதசாரிகள் மற்றும் மாணவ-மாணவிகள், வாகன ஓட்டிகள் யாரும் வெளியில் அச்சமின்றி சென்றுவர முடியாத நிலை தற்போது உள்ளது.



தெருநாய்கள் பெருக்கத்தை கட்டுப்படுத்த அனைத்து மாநிலங்களிலும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கேரள மாநிலத்தில் தெருநாய் கடிக்கு உள்ளாகி ரேபிஸ் நோய் தாக்குதலுக்கு உள்ளாகுபவர்கள் அதிகமாக இருப்பதால், தெருநாய்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கை மற்ற மாநிலங்களை காட்டிலும் அங்கு மிகவும் தீவிரமாக மேற்கொள்ளப்படுகிறது. இந்தநிலையில் தெருநாய்களை விரட்டும் மந்திரக்கோல் ஒன்றை கேரள அரசு பள்ளி மாணவர்கள் கண்டுபிடித்து உள்ளனர். அதற்கு தேசிய அளவில் அங்கீகாரமும் கிடைத்துள்ளது. அது பற்றிய விவரம் வருமாறு:-

கேரள மாநிலம் மலப்புரம் மாவட்டத்தில் உள்ளது அரிக்கோடு. இங்குள்ள வடசேரி என்ற இடத்தில் செயல்படும் அரசு மேல்நிலைப்பள்ளியில் 10-ம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் அபிஷேக், நிஹால், சதீன் முகம்மது சுபைர்.

இந்த மாணவர்கள் தான் தெருநாய்களை விரட்டக்கூடிய எலக்ட்ரானிக் சர்க்கியூட் பொருத்தப்பட்ட மந்திரக் கோலை தயாரித்துள்ளனர். இதில் உள்ள சுவிட்சை அழுத்தினால், அதிலிருந்து விலங்குகளுக்கு விரும்பமில்லாத மீயொலி ஒலி மற்றும் ஒருவித வாசனை வெளியாகும். மேலும் லேசான அதிர்வலைகளையும் வெளியிடும். இதனால் தெருநாய்கள் அந்த மந்திரக்கோல் வைத்திருக்கும் நபரின் அருகில் செல்லாமல் அங்கிருந்து ஓடிவிடும். மாணவர்கள் தயாரித்துள்ள மந்திரக்கோலில் இருந்து வெளியாகக்கூடிய சத்தம் மனிதர்களுக்கு கேட்காது. மேலும் அதிலிருந்து வெளியாகும் வாசனையும் மனிதர்களால் உணர முடியாது. இதனால் அதனை பயன்படுத்துபவர்களுக்கு எந்தவித தொந்தரவும் இருக்காது. மேலும் பாதிக்கவும் செய்யாது.

தெருநாய்களை விரட்டும் மந்திரக்கோலை அரசு பள்ளி மாணவர்கள், தங்கள் பள்ளியின் இயற்பியல் ஆசிரியர் பிரகித் என்பவரின் மேற்பார்வையில் செய்துள்ளனர். மாணவர்களின் இந்த கண்டுபிடிப்புக்கு டெல்லியில் நடைபெற்ற புதுமை மாரத்தான் என்ற நிகழ்வில் பரிசு கிடைத்துள்ளது. இதன் மூலம் அவர்களின் தயாரிப்பு தேசியஅளவில் அங்கீகாரத்தை பெற்றுள்ளது. மேலும் அதனை வணிக ரீதியாக கொண்டுவரும் வகையில் மாணவர்களுக்கு ரூ.50 ஆயிரம் உதவித் தொகையும் வழங்கப்பட்டு இருக்கிறது. தங்களின் கண்டு பிடிப்புக்கு தேசிய அளவில் அங்கீகாரம் கிடைத்திருப்பதால், அதற்கு காப்புரிமை பெற்று தொழில் தொடங்கும் முயற்சியில் அதனை கண்டுபிடித்த அரசு பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர் ஈடுபட்டு வருகின்றனர்.

# இந்தியாவில் இருந்து நிலக்கடலை இறக்குமதியை இந்தோனேசியா நிறுத்தியது

**இந்தோனேசியா,ஆக. 31-**

இந்தியாவில் இருந்து நிலக்கடலை இறக்குமதியை நிறுத்தியது இந்தோனேசியா நிறுத்தியுள்ளது.

அமெரிக்க அதிபராக டிரம்ப் பதவி ஏற்றதில் இருந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். அந்த வகையில், கடந்த 27-ந் தேதி முதல் அமெரிக்காவில் இறக்குமதியாகும் இந்திய பொருட்களுக்கு 50 சதவீதம் வரி விதிக்கப்பட்டு வருகிறது. இதனால் பல்வேறு துறையினர் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இந்த நிலையில், இந்தியாவில் இருந்து நிலக்கடலை இறக்குமதியை இந்தோனேசியா நிறுத்தி வைத்துள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதனால் நிலக்கடலையை இறக்குமதி செய்யும் வியாபாரிகள் கவலை அடைந்துள்ளனர்.

இந்திய நிலக்கடலையில் அதிக அளவு அபிளாடாக்ஸின்" என்ற விஷப்பொருள் இருப்பதால் இந்த தடையை விதிப்பதாக இந்தோனேசியா அரசு தெரிவித்துள்ளது. அபிளாடாக்ஸின் பி1 என்பது கரிப்பக்க நோய் உண்டாக்கும் ஒரு முக்கிய ரசாயனம் என்று கூறப்படுகிறது. இது தொடர்பாக கடந்த 27-ந்தேதி அன்று வெளியிடப்பட்ட அறிக்கையில், நிலக்கடலை இறக்குமதியை நிறுத்தி வைக்கும் உத்தரவு ஏழு நாட்களுக்குப் பிறகு (செப்டம்பர் 3) அமலுக்கு வரும் என்று இந்தோனேசிய தனிமைப்படுத்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து 7 நாட்கள் வரை பில்களுடன் கூடிய சரக்குகள் ஏற்றுக் கொள்ளப்படும். இருப்பினும், ஏற்றுமதிகள் இந்தோனேசியாவிற்குள் நுழையும் போது ஆய்வு மற்றும் மறுசோதனைக்கு உட்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கமலா ஹாரிசுக்கு வழங்கப்பட்ட ரகசிய சேவை பாதுகாப்பு ரத்து

**நியூயார்க், ஆக. 31-**

கடந்த ஜனவரியில் கமலா ஹாரிஸ் பதவி விலகிய நிலையில், 6 மாத காலத்திற்கு அவருக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டு வந்தது. இந்நிலையில், கமலா ஹாரிசுக்கு வழங்கப்பட்ட ரகசிய சேவை பாதுகாப்பு ரத்து செய்யப்பட்டு உள்ளது.

அமெரிக்காவின் முன்னாள் துணை ஜனாதிபதியாக பதவி வகித்தவர் கமலா ஹாரிஸ். கடந்த 2024-ம் ஆண்டு நவம்பரில் நடந்த ஜனாதிபதி தேர்தலின்போது, ஜனநாயக கட்சி சார்பில் வேட்பாளராக போட்டியிட்டார். எனினும், அதில் குடியரசு கட்சியை சேர்ந்த வேட்பாளரான டிரம்ப் வெற்றி பெற்று பதவியேற்றார்.

கமலா ஹாரிசுக்கு, உயர் பதவியை வகிப்பவருக்கு வழங்கப்படும் ரகசிய சேவை பாதுகாப்பு வழங்கப்பட்டு வந்தது. கமலா ஹாரிஸ் துணை ஜனாதிபதியாக பதவி வகித்தபோது, அப்போது ஜனாதிபதியாக இருந்த ஜோ பைடன், பதவியில் இருந்து வெளியேறும் முன் அவருக்கு இந்த பாதுகாப்பு சேவையை ஏற்பாடு செய்து விட்டு சென்றார்.

கடந்த ஜனவரியில் கமலா ஹாரிஸ் பதவி விலகிய நிலையில், 6 மாத காலத்திற்கு அவருக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டு வந்தது. இந்நிலையில், கமலா ஹாரிசுக்கு வழங்கப்பட்ட ரகசிய சேவை பாதுகாப்பு ரத்து செய்யப்பட்டு உள்ளது.

அவருக்கு ஓராண்டு பாதுகாப்பு நீட்டிப்புக்கான சிறப்பு உத்தரவை பைடன் பிறப்பித்து விட்டு சென்றபோதும், டிரம்ப் இதனை ரத்து செய்து உத்தரவிட்டு உள்ளார்.

இதுபற்றி டிரம்ப் நிர்வாகம் வெளியிட்ட செய்தியில், துணை ஜனாதிபதி பதவியில் இருந்து விலகியதில் இருந்து 6 மாதம் வரை மட்டுமே இந்த ரகசிய சேவை பாதுகாப்பு வழங்கப்படும் என விளக்கம் அளிக்கப்பட்டது.

### கேரளா மாநிலத்தில்

# வங்கி ஊழியர்கள் நூதன போராட்டம்

**கொச்சி, ஆக. 31-**

கேரள மாநிலம் கொச்சியில் வங்கி ஊழியர்கள் நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கேரள மாநிலம் கொச்சியில் உள்ள கனரா வங்கி வளாக கேன்டீனில் மாட்டிறைச்சி (பீப்) உணவுகள் சாப்பிடவோ, சமைத்து விற்கவோ கூடாது என்று புதிதாக பொறுப்பேற்ற மேலாளர் உத்தரவிட, அதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஊழியர்கள் நடத்திய நூதனப் போராட்டம் கவனம் பெற்றுள்ளது.

இது குறித்து ஊழியர்கள் கூறுகையில், கொச்சி கனரா வங்கியின் மேலாளராக அண்மையில் பிஹாரை சேர்ந்த ஒருவர் பொறுப்பேற்றுக் கொண்டார். அவர், கொச்சி கனரா வங்கியில் உள்ள கேன்டீனில் பீப் உணவு விற்கக் கூடாது, ஊழியர்கள் பீப் உணவு கொண்டு வந்து சாப்பிடக் கூடாது என்ற உத்தரவைப் பிறப்பித்தார். இதனையடுத்து நாங்கள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம். " என்றனர். முதலில், அவர் ஊழியர்களுக்கு கொடுத்த பணி நெருக்கடியை கண்டித்தே போராட்டத்தை ஒருங்கிணைத்தோம். ஆனால், அவர் உணவுக் கட்டுப்பாடு விடுத்ததும் தெரிந்ததால் இந்தப் போராட்டத்தில் பீப் உணவை பரிமாறவும் முடிவு செய்தோம். என்று இந்திய வங்கி ஊழியர்கள் சம்மேளனம் தெரிவித்தது.


இந்தப் போராட்டத்தின் போது கனரா வங்கி அலுவலகத்துக்கு வெளியே திரண்டிருந்த ஊழியர்கள் பரோட்டா, பீப் கிரேவி சாப்பிட்டனர். வங்கி கூட்டமைப்பின் தலைவர் எஸ்.எஸ்.அனில் கூறுகையில், இங்குள்ள சிறிய கேன்டீனில் வாரத்தின் சில நாட்களில் மட்டும் பீப் உணவு பரிமாறப்படுகிறது. ஆனால், புதிதாக வந்த மேலாளர் அதற்கு தடை விதித்தார். வங்கி என்பது அரசமைப்பின் சட்ட திட்டங்களின் படி இயங்குகிறது. இங்கே உணவு என்பது தனிப்பட்ட விருப்பம். இந்தியாவில், அவரவர் விருப்பமான உணவை உண்ண இயலும். நாங்கள் யாரையும் பீப் சாப்பிட கட்டாயப் படுத்தவில்லை. இங்கே பீப் உண்ணும் போராட்டம் நடந்தது உணவுக் கட்டுப்பாட்டுக்கு எங்கள் எதிர்ப்பை தெரிவிக்கும் முறை. என்றார்,

இந்தப் போராட்டத்துக்கு அரசியல் கட்சியினரும் ஆதரவு தெரிவித்துள்ளனர். இடதுசாரி ஆதரவு பெற்ற சுயேச்சை எம்எல்ஏ ஜலீல் போராட்டத்தை வரவேற்றுள்ளார்.

# இந்தியாவுக்கு நிரந்தர நண்பர்களோ, எதிரிகளோ இல்லை: ராஜ்நாத் சிங்

புதுடெல்லி, ஆக. 31-

'இந்தியாவுக்கு நிரந்தர நண்பர்களோ அல்லது எதிரிகளோ இல்லை. நிரந்தர நலன்கள் மட்டுமே முக்கியம்'' என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.



டெல்லியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் இதுகுறித்து பேசிய ராஜ்நாத் சிங், ''ஐஎன்எஸ் ஹிம்கிரி மற்றும் ஐஎன்எஸ் உதயகிரி உள்ளிட்ட இரண்டு நீலகிரி-வகை ஸ்டெல்த் போர்க்கப்பல்கள் உள்நாட்டில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தன்னம்பிக்கையின் வெளிச்சத்தில், நாடு இப்போது அனைத்து போர்க் கப்பல்களையும் உள்நாட்டிலேயே தயாரித்து வருகிறது. கடற்படை வேறு எந்த நாட்டிலிருந்தும், போர்க்கப்பல்களை வாங்குவதில்லை, அவற்றை இந்தியாவிலேயே தயாரிப்பதாக உறுதியாக உள்ளது. இந்தியாவின் உள்நாட்டிலேயே கட்டமைக்கப்பட்ட பாதுகாப்பு அமைப்பான சுதர்ஷன் சக்ரா விரைவில் பயன்பாட்டுக்கு வரும்.

இந்தியாவின் வெளியுறவு மற்றும் பாதுகாப்புக் கொள்கையின்படி, ''நிரந்தர நண்பர்களோ அல்லது எதிரிகளோ இல்லை, நிரந்தர நலன்கள் மட்டுமே உள்ளன. அமெரிக்க அதிபர் ட்ரம்ப் விதித்த இந்தியா மீதான 50 சதவீத வரிவிதிப்பை தொடர்ந்து, உலகளவில், தற்போது வர்த்தகத்தில் போர் போன்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது

வளர்ந்த நாடுகள் பாதுகாப்புவாதத்துக்கு மாறி வருகின்றன. ஆனால், இந்தியா யாரையும் தனது எதிரியாகக் கருதுவதில்லை. அதே நேரத்தில் இந்தியா தனது தேசிய நலன்களில் எப்போதும் சமரசம் செய்யாது. நிலையற்ற புவிசார் அரசியலுக்கு மத்தியில், சுயசார்பு என்பது ஒரு நன்மை மட்டுமல்ல, ஒரு அத்தியாவசிய தேவையாகிவிட்டது.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை நம் உள்நாட்டு வலிமையை உலகுக்கு வெளிப்படுத்தியது. பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்குப் பிறகு இந்தியாவின் துல்லியமான தாக்குதல்களின் வெற்றி உள்நாட்டு பாதுகாப்பு அமைப்புகளின் செயல்திறனை எடுத்துக்காட்டுகிறது.

இந்தியாவின் பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதி 2014 இல் ரூ.700 கோடிக்கும் குறைவாக இருந்தது. அது இன்று கிட்டத்தட்ட ரூ.24,000 கோடியாக உயர்ந்துள்ளது. இது பாதுகாப்பு தளவாடங்களில் வளர்ந்து வரும் ஏற்றுமதியாளராக இந்தியா மாறியதைக் குறிக்கிறது' எனத் தெரிவித்துள்ளார்

# ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை திட்டமிடப்பட்டது எவ்வாறு..?

## விமானப்படை ஏர் மார்ஷல் விளக்கம்

புதுடெல்லி, ஆக. 31-

இந்தியா - பாகிஸ்தான் எல்லையில், பயங்கரவாத முகாம்கள் மீது, இந்திய முப்படைகள் இணைந்து நடத்திய ஆபரேஷன் சிந்தூர் தொடர்பான புதிய விடியோக்கள் வெளியாகியிருக்கின்றன.

புது டெல்லியில் நேற்று நடைபெற்ற என்.டி.டி.வி. தற்காப்புக் கருத்தரங்கில், விமானப் படை ஏர் மார்ஷல் நர்மதேஷ்வர் திவாரி, ஆபரேஷன் சிந்தூர் பற்றிய புதிய விடியோக்களை வெளியிட்டு அவற்றின் விவரங்களைத் தெரிவித்துள்ளார்.

ஜம்மு - காஷ்மீர் மாநிலம் பஹல்காமில், சுற்றுலா பயணிகள் மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிராக இந்திய நடத்தியதே ஆபரேஷன் சிந்தூர்.

ஆபரேஷன் சிந்தூர் திட்டமிடப்பட்டது எப்படி, செயல்படுத்தப்பட்டது எவ்வாறு மற்றும் அதன்பிறகான தாக்குதல்கள் குறித்து புதிய விடியோ மற்றும் புகைப்படங்களை வெளியிட்டு விவரித்திருக்கிறார் ஏர் மார்ஷல் நர்மதேஷ்வர் திவாரி.

ஆபரேஷன் சிந்தூர், மிகச் சிறந்த திருப்புமுனையாக அமைந்த தருணம் என்றும், விமானப் படை, இந்தியாவின் போர் வாள் என்பதை உறுதி செய்வதற்கான வாய்ப்பாக அமைந்ததாக திவாரி குறிப்பிட்டுள்ளார்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது, இந்திய படைகளின் தாக்குதல் நமது ஒட்டுமொத்த படை பலத்துக்கும் ஒரு சிறிய சான்றுதான். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்குப் பிறகு, பொது வெளியில் இதுபற்றி பேசுவது இதுவே முதல் முறை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய விமானப் படைக்கு, இரண்டு முக்கிய இலக்குகள் கொடுக்கப்பட்டன. ஒன்று, பாகிஸ்தானின் உள்ளே இருக்கும் முரித்கேவில் உள்ள லஷ்கர்-ஏ-தொய்பா தலைமையிடம், இது சர்வதேச எல்லையிலிருந்து சுமார் 30 கிலோ மீட்டர் தொலைவில் இருந்தது, மற்றொன்று பஹவல்பூர் - இங்கு ஜெய்ஷ்-ஏ-முகமது தலைமையிடம் அமைந்திருந்தது. இதுவும் பாகிஸ்தானுக்குள் சுமார் 100 கிலோ மீட்டர் தொலைவில் இருந்தது.

இந்திய ராணுவத்துக்கு, எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டருகே சுமார் 7 கூடுதல் இலக்குகள் வழங்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு இலக்குகளும் எங்களுக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் துல்லியமாக தாக்குதல் நடத்துவது மற்றும் குறைந்த இழப்புகளை நோக்கமாகக் கொண்டு திட்டமிடப்பட்டது. ஒவ்வொரு பாதுகாப்புத் தளவாடங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டோம்.

முரித்கேவில், நிர்வாகப் பிரிவு கட்டிடம் மற்றும் இரண்டு தலைவர்களின் வீடுகள் மீது குண்டுகள் போடப்பட்டன. டிரோன் மூலம் எடுத்த பதிவுகளில், முதற்கட்ட தாக்குதலில், அந்தக் கட்டடத்தின் மேல் பகுதியில் சிறிய ஓட்டை மட்டுமே விழுந்திருந்தது தெரிய வந்தது. அதன்பிறகே, உள்பகுதிகளில் எடுக்கப்பட்ட விடியோக்கள் மூலம், கட்டடத்தின் உள்பகுதி ஒட்டுமொத்தமாக சேதமடைந்து, கட்டிடம் நொறுங்கியிருப்பது தெரிய வந்தது.

பஹவல்பூரை எடுத்துக் கொண்டால், ஐந்து இடங்கள் குறி வைத்துத் தாக்கப்பட்டன, நிர்வாகப் பிரிவு கட்டிடம், உறுப்பினர்களின் வீடுகள், தலைவர்களின் தங்குமிடங்கள் என்பன அவை. அங்கு மிக முக்கிய ஆயுதத்தால் நடத்தப்பட்ட துல்லிய தாக்குதல், பல அடுக்கு தளங்களை ஊடுருவி தாக்கி, கட்டளை மையத்தையே அழித்திருந்தது.

பல ஆயிரம் வார்த்தைகள் சொல்வதை விட ஒரு புகைப்படம் பேசிவிடும் என்று கூறிய ஏர் மார்ஷல் திவாரி, முக்கிய பயங்கரவாத தலைவர்களின் இறுதிச் சடங்கில், பாகிஸ்தான் உயர் அதிகாரிகள், காவல்துறை உயர் அதிகாரிகள் என பலரும் பங்கேற்றிருந்த புகைப்படத்தைக் காட்டினார். இது, பாகிஸ்தான் அரசு, நேரடியாக பயங்கரவாதத்தை ஊக்குவிக்கிறது என்பதற்கான சாட்சி என்றும் கூறினார்.

மேலும், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையால், பாகிஸ்தான் உடனடியாக தாக்குதலை நிறுத்தக் கோரியது. மே 10ஆம் தேதி இரு தரப்பும் ஒப்புக் கொண்டு, இந்தியா - பாகிஸ்தான் இடையே சண்டை நிறுத்தம் ஏற்பட்டது. முப்படைகள் நடத்தி வந்த தாக்குதல் நிறுத்தப்பட்டது என்றார்.

# ஆளுமைமிக்க மூப்பனார் பிரதமர் ஆவதை தடுத்தனர்

## மத்திய அமைச்சர் குற்றச்சாட்டு

சென்னை, ஆக. 31-

''ஆளுமைமிக்க மூப்பனார் பிரதமர் ஆவதை தடுத்ததை, தமிழகத்துக்கு நடந்த துரோகம் என்று கருதுகிறேன்'' என மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மாநில காங்கிரஸ் நிறுவனர் மூப்பனாரின் 24-வது நினைவு தினத்தை முன்னிட்டு சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள அவரது நினைவிடத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, நிர்மலா சீதாராமன், பா.ஜ.க. தமிழக தலைவர் நயினார் நாகேந்திரன், முன்னாள் தலைவர் அண்ணாமலை உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர்.

பின்னர் நிர்மலா சீதாராமன் செய்தியாளர்களிடம் பேசியதாவது: எளிமையும், நேர்மையும், தேசியமும் கலந்த ஒரு தேசிய கட்சியின் தலைவராக இருந்தவர் மூப்பனார். அவருக்கு நாடு தழுவிய அளவில் மதிப்பும், மரியாதையும் இருந்தது. ஆளுமைமிக்க மூப்பனார் தமிழகத்துக்கே பெருமை சேர்க்கும் வகையில், பிரதமராக வேண்டிய சந்தர்ப்பம் உருவானது. ஆனால், அவர் பிரதமராக வேண்டிய தருணத்தை அவர்கள் தடுத்தனர். அந்த சக்தி யார் என்று நமக்கு தெரியும்.

தமிழ், தமிழ் கலாச்சாரம், தமிழின் புகழ் என்று திரும்பத் திரும்ப பேசுபவர்கள் தமிழர் பிரதமர் ஆக வேண்டிய அந்த தருணத்தில் ஆதரவு தராமல் தடுத்தனர். இதையும் நாம் மனதில் வைத்து கொள்ள வேண்டும். இதனை மறக்கவும் முடியாது. ஆளுமைமிக்க மூப்பனார் பிரதமர் ஆவதை தடுத்ததை, தமிழகத்துக்கு நடந்த துரோகம் என்று கருதுகிறேன். அரசியல் இங்கே பேசக் கூடாது. மன்னித்து விடுங்கள். இங்கு புகழஞ்சலி செலுத்த வந்து இருக்கிறோம்.

தமிழகத்தில் மூப்பனாரின் கொள்கைகளுக்கு ஏற்றவாறு நல்லாட்சி அமைய நாம் அனைவரும் முயற்சிக்க வேண்டிய தருணம் இது. 2026 தேர்தலில் தமிழகத்தில் ஒரு பெரும் மாறுதலை கொண்டு வர வேண்டிய தேவை நமக்கு உள்ளது. தமிழக மக்கள் நல்லாட்சி வேண்டும் என கேட்கிறார்கள். ஒரு குடும்பம் பிழைத்துக் கொண்டிருக்கிறது. இதனால் தமிழ் மக்களுக்கு ஒரு ஆதரவும் இல்லை.

மக்கள் அனைவருக்கும் தொண்டு ஆற்றுவது நமது கடமை. அதனால் உங்கள் அனைவருக்கும் சிரம் தாழ்த்தி கைகூப்பி கேட்டுக் கொள்கிறேன். இந்த கூட்டணியை நல்லபடியாக நடத்த வேண்டும். இந்த கூட்டணியின் மூலமாக மக்களுக்கு செய்ய வேண்டிய தொண்டை ஆற்ற வேண்டும். சிறிய, சிறிய உட்பூசலை பற்றி நாம் கவலை கொள்ள தேவையில்லை.

முதிர்ச்சியடைந்த பக்குவமாக இருக்கக்கூடிய தலைவர்கள் இங்கு இருக்கின்றனர். எல்லோரும் சேர்ந்து மக்களுக்கு தொண்டாற்ற வேண்டும்'' இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# பீகாரில் ராகுல் காந்தியின் வாக்காளர் உரிமை பேரணியில் பங்கேற்றார் அகிலேஷ் யாதவ்

பீகார், ஆக. 31-

பீகாரில் வாக்கு திருட்டுக்கு எதிராக மக்களவை எதிர்க் கட்சி தலைவர் ராகுல் காந்தி வாக்காளர் உரிமை பேரணி மேற் கொண்டுள்ளார்.

சில நாட்களுக்கு முன்பு ராகுல் காந்தியின் பேரணியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்றார். தர்பங்காவில் திறந்தவெளி ஜீப்பில் ராகுல் காந்தி, பிரியங்கா காந்தியுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேரணியாக சென்றார். பேரணியில் தி.மு.க. எம்.பி. கனிமொழி, பீகார் எதிர்க்கட்சி தலைவர் தேஜஸ்வி யாதவ் ஆகியோரும் பங்கேற்றனர்.

இந்நிலையில், நேற்று ராகுல் காந்தியின் வாக்காளர் உரிமை பேரணியில் உத்தரபிரதேச எதிர்க்கட்சி தலைவர் அகிலேஷ் யாதவ் நேற்று பங்கேற்றார்.

இந்த பேரணியில் பேசிய அகிலேஷ் யாதவ், "வாக்காளர் உரிமை பேரணியில்சேர நான் இங்கு வந்துள்ளேன். யாத்திரையை ஆதரிப்பதற்காக பீகார் மக்களை நான் வாழ்த்த விரும்புகிறேன். பீகாரின் குரல் நாடு முழுவதும் ஒலிக்கிறது. இந்த முறை பாஜக பீகாரிலிருந்து வெளியேறப் போகிறது" என்று தெரிவித்தார்.

# ஜம்மு - காஷ்மீரில் நிலச்சரிவு: ஒரே குடும்பத்தை சேர்ந்த 7 பேர் பலி

காஷ்மீர், ஆக. 30-

ஜம்மு - காஷ்மீரின் ரியாசியில் நிலச்சரிவு காரணமாக வீடு இடிந்து விழுந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் உயிரிழந்தனர்.

ஜம்மு காஷ்மீரின் பல மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. நிலச்சரிவு மற்றும் கன மழை காரணமாக ஜம்மு - காஷ்மீரில் ஏராளமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஜம்மு - காஷ்மீரின் ரியாசியில் ஏற்பட்ட மேகவெடிப்பை தொடர்ந்து நேற்று அதிகாலை 3 மணியளவில் கடும் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேர் மண்ணுக்குள் புதைந்தனர். இதில் ஐந்து குழந்தைகள் உட்பட ஏழு பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

கடும் மழை காரணமக மீட்புப் பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மாஹோர் பகுதியில் இருந்த அந்த வீடு நிலச்சரிவில் சிக்கியது குறித்து அதிகாலையில்தான் தெரியவந்ததாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த குடும்பத்தினர் 4 மணி நேரம் மண்ணில் புதைந்து இருந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. இதே போல காஷ்மீரின் ராம்பன் மாவட்டத்தின் ராஜ்காட் பகுதியில் ஏற்பட்ட மேக வெடிப்பு காரணமாக 4 பேர் உயிரிழந்தனர். இருவரை காணவில்லை என்று போலீஸார் தெரிவித்துள்ளனர்.

# குற்றாலம் மெயின் அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை

தென்காசி, ஆக. 31-

குற்றாலம் மெயின் அருவியில் சுற்றுலா பயணிகளுக்கு குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

தென்காசி மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் கடந்த மூன்று நாட்களாக பெய்த தொடர் சாரல் மழை எதிரொலியாக குற்றால அருவிகளில் தண்ணீர் வரத்து அதிகரித்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை குற்றாலம் மெயின் அருவியில் திடீரென தண்ணீர் வரத்து மிகவும் அதிகரிக்க தொடங்கியதால் அருவியில் குளித்துக் கொண்டிருந்த சுற்றுலா பயணிகளை பாதுகாப்பு கருதி அருவி கரையிலிருந்து போலீசார் அப்புறப்படுத்தினர்.

தொடர்ந்து வனப்பகுதியில் சாரல் மழை பெய்ததால் நேற்று முன்தினம் மாலை முதல் நேற்று வரை தொடர்ந்து குற்றாலம் மெயின் அருவியில் மட்டும் சுற்றுலா பயணிகள் குளிக்க தடையானது நீட்டிக்கப்பட்டுள்ளது. மற்ற அருவிகள் அனைத்திலும் சுற்றுலா பயணிகள் விடுமுறை தினம் என்பதால் காலை முதலே ஆர்வமுடன் குளித்து மகிழ்ந்து வருகின்றனர்.

# நீதிமன்ற நேரம் வீணாகும் வகையில் பொதுநல வழக்கு; ரூ.1 லட்சம் அபராதம் விதித்த சென்னை ஐகோர்ட்டு

சென்னை, ஆக. 31-

திருவள்ளூர் கோலப்பன் சேரியில் விதிகளை மீறி பெட்ரோல் பங்க் அமைக்கப்பட்டுள்ளது என தெரிவித்து, இதற்கு எதிராக சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த மனு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது. இதனை விசாரித்த ஐகோர்ட்டு, மனுதாரரர் கூறும் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் இல்லை என கூறி வழக்கை தள்ளுபடி செய்தது.

இதேபோன்று நீதிமன்ற நேரம் வீணாகும் வகையில் பொதுநல வழக்கு தாக்கல் செய்தவருக்கு ரூ.1 லட்சம் அபராதம் விதித்து சென்னை ஐகோர்ட்டு, உத்தரவிட்டுள்ளது. மேலும், முறையான ஆய்வுகளை மேற்கொண்ட பின், பொது நல வழக்குகளை தாக்கல் செய்ய வேண்டும். முறையான ஆய்வுகளை மேற்கொள்ளாமல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என கூறி ஐகோர்ட்டு கண்டனம் தெரிவித்துள்ளது.

# ட்ரம்ப் வரிக்கு இந்தியா பதிலடி: அமெரிக்காவுக்கான அனைத்து அஞ்சல் சேவைகளும் நிறுத்தம்

புதுடெல்லி, ஆக. 31-

அமெரிக்காவுக்கான அனைத்து அஞ்சல் சேவைகளையும் இந்திய தபால் துறை ரத்து செய்துள்ளது.

இந்திய பொருட்களுக்கு அமெரிக்கா விதித்துள்ள 25 சதவீத கூடுதல் வரி விதிப்பு கடந்த புதன்கிழமை (ஆக.27) அமலுக்கு வந்தது. ஏற்கெனவே விதித்த 25 சதவீத வரியோடு இந்த கூடுதல் 25 சதவீதமும் சேர்ந்துள்ள நிலையில், 50 சதவீத வரி விதிப்பு இந்தியாவின் ஏற்றுமதியை கடுமையாக பாதிக்கும் என்று நிபுணர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதனால், தொழிலாளர் சார்ந்த துறைகள் ஏற்றுமதி 70 சதவீதம் அளவுக்கு குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், இந்த வரிவிதிப்புக்கு பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்காவிற்கான அனைத்து அஞ்சல் சேவைகளையும் இந்தியா நிறுத்தியுள்ளது.

கடிதங்கள், ஆவணங்கள் மற்றும் 100 டாலர் வரையிலான பரிசுகள் உட்பட அமெரிக்காவுக்கு அனுப்பப்படும் அனைத்து வகை அஞ்சல்களையும் நிறுத்தி வைப்பதாக தபால் துறை அறிவித்துள்ளது.

கடந்த ஆகஸ்ட் 22 அன்று, 100 டாலர் வரையிலான மதிப்புள்ள ஆவணங்கள்/கடிதங்கள் மற்றும் பரிசுகளைத் தவிர, அமெரிக்காவிற்கு அஞ்சல் சேவைகளை முன்பதிவு செய்தல் மற்றும் அனுப்புவதை ஆகஸ்ட் 25 முதல் நிறுத்தி வைப்பதாகத் துறை தெரிவித்திருந்தது..

முன்னதாக அஞ்சல் துறை வெளியிட்ட அறிவிப்பில் ''புதிய விதிமுறைகளின் காரணமாக ஆகஸ்ட் 25 க்குப் பிறகு சரக்குகளை ஏற்க முடியாது என்று அமெரிக்காவுக்குச் செல்லும் விமான நிறுவனங்கள் இந்திய அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளன. மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, கடிதங்கள்/ஆவணங்கள் மற்றும் 100 அமெரிக்க டாலர் வரை மதிப்புள்ள பரிசுப் பொருட்கள் தவிர, ஆகஸ்ட் 25 முதல் அமெரிக்காவுக்கு அனுப்பப்படும் அனைத்து வகையான அஞ்சல் பொருட்களின் முன்பதிவையும் தற்காலிகமாக நிறுத்தி வைக்க அஞ்சல் துறை முடிவு செய்துள்ளது'' என்று கூறப்பட்டிருந்தது.



அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று த.மா.க. நிர்வனரும் முத்த அரசியல் வாதியுமான ஜி.கே. மூப்பனாரின் நினைவு நாள் நிகழ்ச்சியல் கலந்து கொண்டு பேசினார்.

# அ.தி.மு.க. கூட்டணிக்கு பா.ம.க. வரும்: எடப்பாடி பழனிசாமி தகவல்

சென்னை, ஆக. 31-

அ.தி.மு.க. கூட்டணிக்கு பா.ம.க. கட்டாயம் வந்து சேரும் என்று இ.பி.எஸ். தெரிவித்துள்ளார்.

அதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் அதிமுக தலைமையகத்தில் நேற்று எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடைபெற்றது. அப்போது வருகின்ற சட்டமன்ற தேர்தலை சந்திப்பது தொடர்பாக தீவிர ஆலோசனை நடத்தப்பட்டது. அப்போது, 2026 சட்டமன்ற தேர்தலுக்கான பணிகளை மேலும் வேகப்படுத்துமாறு நிர்வாகிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

மாவட்டச் செயலாளர்கள் மத்தியில் கூட்டணி பற்றி பேசும்போது, அதிமுக கூட்டணி பாமக கட்டாயம் வரும் என உறுதிப்பட தெரிவித்ததாக தகவல் வெளியாகியுள்ளது. பா.ம.க.-வில் டாக்டர் ராமதாஸ்-க்கும், அன்புமணிக்கும் இடையிலான மோதல் அவர்களுடைய குடும்ப சண்டை. அந்த பிரச்சினைக்கு விரைவில் தீர்வு வந்துவிடும். 2026-ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் நம்முடைய கூட்டணிக்குதான் வருகிறார்கள் என்று எடப்பாடி பழனிசாமி கூறியதாக, மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

அதிமுக கூட்டணியை மேலும் வலுவடையச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் சிறிய கட்சிகள் இருந்தால், அவற்றை அதிமுக-வுடன் கொண்டு வந்து இணைக்கும் பணிகளை பாருங்கள் எனவும் அறிவுறுத்தியதாக நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

# மத்திய பா.ஜ.க. அரசைக் கண்டித்து திருவள்ளூர் எம்.பி. 2-வது நாளாக உண்ணாவிரத போராட்டம்

திருவள்ளூர், ஆக. 31-

தமிழக மாணவர்களுக்கு கல்வித் தொகையை வழங்காததை கண்டித்தும், நிதி அளிக்க மறுக்கும் மத்திய பாஜக அரசைக் கண்டித்து திருவள்ளூர் மக்களவை உறுப்பினர் சசிகாந்த் செந்தில் இரண்டாவது நாளாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.



திருவள்ளூர் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை வளாகத்தில் திஷாக்குழு பார்வையாளர்கள் கூடமான ராஜீவ் பவனில் மக்களவை உறுப்பினர் சசிகாந்த் செந்தில் வெள்ளிக்கிழமை உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கினார். கல்வி மட்டுமே ஒரு சமூகத்துக்கு உண்மையான விடுதலையை பெற்றுத் தர முடியும். அந்த கோட்பாட்டின் அடிப்படையில் தொடர்ந்து தமிழகத்துக்கு அளிக்க வேண்டிய கல்விக்கான நிதியை மத்திய பாஜக அரசு தர மறுத்து வருகிறது. இதைக் கண்டித்து ஒடுக்கப்பட்ட பட்டியலின, பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் கல்வி உரிமையை மீட்டெடுக்கும் வகையில் காலவரையற்ற உண்ணாவிரதம் தொடங்கியுள்ளேன்.

மத்திய அரசு ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்டத்தின் கீழ் 2023-24-இல் 4-ஆவது தவணை நிதி ரூ.249 கோடியும், 2024-25 ஆம் ஆண்டுக்கான ரூ.2,152 கோடியும் தமிழகத்திற்கு வழங்கப்படவில்லை என குற்றம்சாட்டினார். இந்நிலையில், தமிழக மாணவர்களுக்கு கல்வி நிதி அளிக்க மறுக்கும் மத்திய பாஜக அரசைக் கண்டித்து திருவள்ளூர் மக்களவை உறுப்பினர் சசிகாந்த் செந்தில் இரண்டாவது நாளாக சனிக்கிழமை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

இந்திய அரசியலமைப்பிற்கு விரோதமாக கல்வி நிதியை நிறுத்தி வைத்திருப்பதாகவும், இதனால் 43 லட்சம் மாணவர்கள், 2.2 லட்சம் ஆசிரியர்களின் எதிர்காலம் பாதிக்கப்படுவதாக குற்றம் சாட்டியுள்ளார். மேலும், இது தனிப்பட்ட போராட்டம் அல்ல, தமிழக மாணவர்களின் கல்வி உரிமைக்கான போராட்டம். நிதி விடுவிக்கப்படும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை தொடருவேன் என கூறியுள்ளார். அவரது போராட்டத்தில் காங்கிரஸ் நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றுள்ளனர்.

# விஜய் சுற்றுப்பயணம் கூறித்து த.வெ.க. தலைமை ஆலோசனை

சென்னை, ஆக. 31-

த.வெ.க. தலைமை ஆசோரனை கூட்டத்தில் முதற்கட்ட சுற்றுப்பயணத்தை தொடங்குகிறார் விஜய் என்று தெரிவித்துள்ளது.



தமிழக சட்டசபை தேர்தலை சந்திக்க அரசியல் கட்சிகள் தீவிரம் காட்டி வருகின்றன. தற்போதைய சூழ்நிலையில் தமிழக அரசியல் களத்தில் தி.மு.க, அ.தி.மு.க., நாம் தமிழர், த.வெ.க. என 4 முனை போட்டி உறுதியாகியுள்ளது. பிரதான கட்சிகளாக உள்ள தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் தங்களது தலைமையில் கூட்டணி அமைத்துள்ளது. நாம் தமிழர் கட்சி தனித்து களம் காண்கிறது. விஜய் தலைமையிலான த.வெ.க.வும் கிட்டத்தட்ட தனித்து போட்டியிடுவது உறுதியாகிவிட்டது. தே.மு.தி.க., பா.ம.க. ஆகிய கட்சிகள் எந்த அணியில் இணைவது என்று முடிவு செய்யவில்லை. ஜனவரிக்கு பிறகு கூட்டணி குறித்து முடிவு செய்வதாக தே.மு.தி.க. ஏற்கனவே அறிவித்துவிட்டது.

இந்த சூழ்நிலையில் மதுரையில் 2-வது மாநாட்டை நிறைவு செய்துள்ள த.வெ.க. தேர்தலுக்கான அடுத்தக் கட்ட நகர்வை நோக்கி நகர தொடங்கி உள்ளது. வரும் செப்டம்பர் மாதத்தில் இருந்து மக்கள் சந்திப்பை நடத்த விஜய் முடிவு செய்துள்ளார். த.வெ.க.வின் கொள்கை தலைவரான தந்தை பெரியார் பிறந்தநாளான செப்டம்பர் 17-ந்தேதி, ஈரோட்டில் இருந்து முதல் மக்கள் சந்திப்பை நடத்த விஜய் முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. இதற்காக மாவட்ட செயலாளர்களுடன் தொலைபேசி வாயிலாக தொடர்ந்து விஜய் ஆலோசனை நடத்தி வருகிறார். இந்த நிலையில், பனையூரில் உள்ள த.வெ.க. கட்சி அலுவலகத்தில் மாவட்ட செயலாளர்களுக்கான ஆலோசனை கூட்டம் இன்று நடைபெற்றது. இதில் திருச்சி, புதுக்கோட்டை, நாமக்கல் உள்ளிட்ட 10 மாவட்ட த.வெ.க. நிர்வாகிகளுடன் அக்கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் ஆலோசனை நடத்தினார்.

அப்போது விஜய் சுற்றுப் பயணத்திற்கான ஏற்பாடுகள், அதற்கான அனுமதி பெறுவது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது. மேலும் விஜய் மக்கள் சந்திப்பு சுற்றுப்பயண விவரம் குறித்த பட்டியல் விரைவில் வெளியிடப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



சென்னை மணலி மண்டலதிற்க்குப்பட்ட எவர்வின் வித்யாஸ்ரம் பள்ளி வளாகத்தில் நடந்த நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமினை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பார்வையிட்டு பயனாளிகளுடன் கலந்துரையாடினார். உடன் நிலை குழு தலைவர் டாக்டர் சாந்தகுமாரி உள்ளார்.

# காஞ்சிபுரம் கீழம்பி குளத்தை தூய்மைப்படுத்தும்பணி: கலெக்டர் கலைச்செல்வி துவக்கி வைத்தார்



**காஞ்சிபுரம், ஆக.31 -** காஞ்சிபுரம் கீழம்பி ஊராட்சியில் உள்ள குண்டுமணி குளத்தை தூய்மைப்படுத்தும் பணியினை மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி துவங்கி வைத்து, தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு, காலநிலை மாற்றம், வன பாதுகாப்பு, நீர்நிலைகளில் ஒட்டுமொத்த தூய்மை பணி நிகழ்வானது துவங்கப்பட்டது. அதன்படி காடுகள், வன விலங்கு வாழ்விடங்கள் மற்றும் சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலங்களைப் பாதுகாத்தல், பறவைகள் சரணாலயங்கள் உட்பட அனைத்து நீர்நிலைகளையும் பாதுகாக்க வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம் என, அதிகாரிகள் தெரிவித்தனர். அதன்படி காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், கீழம்பி ஊராட்சியில் குண்டுமணி குளம் தூய்மைப்படுத்தும் பணியினை மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி நேற்று துவக்கி வைத்தார். குளத்தை தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டார். தொடர்ந்து கீழம்பி ஊராட்சி பொது மக்கள் குளத்தினை தூய்மைப்படுத்தும் நீர்நிலைகளை பாதுகாப்பதோடு நிலத்தடி நீரை சேமிக்க வேண்டும் என, முடிவு எடுத்தனர். முன்னதாக கலெக்டர் தலைமையில் 'பிளாஸ்டிக்' ஒழிப்பு குறித்த உறுதிமொழி கீழம்பி தனியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஆர்த்தி, காஞ்சிபுரம் ஒன்றிய குழுத் தலைவர் மலர்க்கொடி, கீழம்பி ஊராட்சிமன்ற தலைவர் மகாலட்சுமி, உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பொது மக்கள் என, பலரும் கலந்து கொண்டனர்.



மதுரவாயல்சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட151வதுவார்டுபூத்தப்பேடுசென்னைநடுநிலைப் பள்ளியில் புதிய 4 வகுப்பறைகள் கட்டும் பணியை காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ தொடங்கி வைத்தார். உடன் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன்,மாமன்ற உறுப்பினர் ச.சங்கர்கணேஷ், எஸ்.அருணாசலம், வி.விஜயன்,ஆர்.சேகர், பூத்தப்பேடு பி.ரகு, ஏ.செந்தில்குமார், செ.ராமையா, என்.துரை,கே.குமார்,எம்.சுந்தர் மற்றும் பலர் உள்ளனர்.



திருவள்ளூர்மாவட்டம், பூவிருந்தவல்லியில நடந்த மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு. நாசர் ஆகியோர் கலந்து கொண்டு தேர்வு பெற்றவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினர். உடன் மாவட்ட கலெக்டர் மு.பிரதாப் உள்ளார்.



தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தில் மாநில அளவிலான இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவ மாணவர்களுக்கு குழந்தை நலம் மருத்துவம் குறித்து வினாடி வினா நிகழ்ச்சி நடைபெற்றது.

# சென்னையின் மழைநீர் வடிகால் கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில் ஓட்டேரி நல்லா கால்வாய், ரயில்வே ஆன்ஸ்லி கால்வாய், கேப்டன் காட்டன் கால்வாய், கொடுங்கையூர் கால்வாய்கள் தூர்வாரும் பணிகள்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்





**சென்னை,ஆக.31** வடகிழக்குப் பருவமழையின் போது அதிகமழை பொழிவு ஏற்பட்டாலும், சென்னையில் நீர் தேங்காமல் இருப்பதற்காக தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் நீர்வளத்துறை ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள கால்வாய்களில் ஆழப்படுத்துதல், அகலப்படுத்துதல், கான்கிரீட் சுவருடன் கூடிய மூடுகால்வாய்களை அமைத்தல், மழைநீர் கால்வாய்கள் அமைத்தல், கால்வாய்கள் கடலுடன் சேரும் பகுதிகளில் தூர்வாருதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள உயர் அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டங்கள் மற்றும் களஆய்வு பணிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றார்.

இதன் காரணமாக கடந்த ஆண்டுகளில் எதிர்பாராத வகையில் சென்னையில் அதிக அளவு மழைபெய்த போதும், சில மணி நேரங்களிலேயே வெள்ளநீர் வடிந்து உடனடியாக போக்குவரத்து இயல்பு நிலைக்கு திரும்பியதால் பல்வேறு தரப்பினரிடமிருந்து பாராட்டைப் பெற்றது. தற்பொழுது பிற மாநிலங்களில் மேகவெடிப்பு உள்ளிட்ட பெருமழைப் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குறிப்பாக சென்னையின் பல்வேறு பகுதிகளில் மழை வெள்ள முன்னேற்பாட்டுப் பணிகள் முன்னுரிமை அடிப்படையில் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.அந்த வகையில், தமிழ்நாடு துணை முதலமைச்சர்உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட திரு.வி.க. நகர் மண்டலம், ஓட்டேரி நல்லா கால்வாயில் 65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தூர்வாருதல், தடுப்புச் சுவரினை உயர்த்திக் கட்டுதல், சங்கிலி வேலி அமைத்தல் உள்ளிட்ட பணிகளை இன்று (30.8.2025) தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

தொடர்ந்து, திரு.வி.க. நகர் மண்டலம், இரயில்வே ஆன்ஸ்லி கால்வாயில் 3.27 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், தண்டையார்பேட்டை மண்டலத்தில் வியாசர்பாடி, கேப்டன் காட்டன் கால்வாயில் 6.85 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், கொடுங்கையூர் கால்வாயில் 3.75 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் என மொத்தம் 78.87 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தூர்வாருதல், பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் மிதக்கும் பொருட்களை அகற்றும் பணிகளைத் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

மேலும், நீர்வளத்துறையின் மூலம் 28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எண்ணூர் சிற்றோடை பாலம், கொசஸ்தலை ஆற்றில் சாம்பலை அகற்றுதல் மற்றும் தூர்வாரும் பணி, எண்ணூர் சுரங்கப்பாதை பக்கிங்காம் கால்வாயில் 4.50 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் தூர்வாரும் பணி, அமுல்லவாயல் பாலம், புழல் உபரிநீர் கால்வாயில் 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தூர்வாரும் பணி என மொத்தம் 32.90 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான தூர்வாரும் பணிகளை துணை முதலமைச்சர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.இந்த ஆய்வுகளின் போது, சீரமைப்புப் பணிகளை வடகிழக்குப் பருவமழைக்கு முன்னதாக முடிவடையும் வகையில் விரைவாகவும், தரமாகவும் மேற்கொள்ள வேண்டும் எனவும், பணிகளை தொடர்புடைய உயர் அலுவலர்கள் தொடர் ஆய்வு மேற்கொண்டு குறிப்பிட்ட காலத்தில் முடிவடைவதை உறுதி செய்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென துணை முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.இந்த ஆய்வின்போது, நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்கே.என்.நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்பி.கே.சேகர் பாபு, மேயர் ஆர். பிரியா, வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் கள்தாயகம் கவி, .ஆர்.டி.சேகர்ஜே.ஜே.எபினேசர், எஸ்.சுதர்சனம், கே.பி.சங்கர், துணை மேயர்மு.மகேஷ்குமார், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், மாநகராட்சி ஆணையர். ஜெ.குமரகுருபரன், , நீர்வளத்துறை செயலாளர் ஜெ. ஜெயகாந்தன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், வட்டார துணை ஆணையாளர்கள் திரு. எச்.ஆர்.கௌஷிக், .கட்டா ரவி தேஜா, நீர்வளத்துறை தலைமைப் பொறியாளர்.பொதுப்பணித்திலகம் லர்கள் கலந்து கொண்டனர்.

# உலர், ஈர மாவு அரைக்கும் இயந்திரம் வாங்க மானிய தொகைக்கு விண்ணப்பிக்கலாம்: நாளை கடைசி நாள்

**சென்னை ஆக 31-** மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் உலர், ஈர மாவு அரைக்கும் இயந்திரம் வாங்க மானிய தொகைக்கு விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னை மாவட்ட கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜகடே வெளியிட்ட அறிவிப்பு: சமூகத்தில் பின்தங்கிய பிரிவினரான கைம்பெண்கள், ஆதரவற்றோர், கணவனால் கைவிடப்பட்டோர் மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மகளிரின் பொருளாதார சவால்களை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், பொருளாதார ரீதியாக அவர்களை வலுப்படுத்தவும் ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.2025-26ம் நிதியாண்டிற்காக, வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் ரூ.10,000 அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்புள்ள உலர் மற்றும் ஈர மாவு அரைக்கும் வணிக ரீதியிலான இயந்திரங்கள் வாங்கும்போது, மொத்த விலையில் 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.5,000 மானியத் தொகையாக வழங்கப்படும். இத்திட்டத்தில், கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் தகுதியுள்ள மகளிர் தமிழ்நாட்டில் பூர்வீகமாக வசிப்பவராக இருக்க வேண்டும். வயது 25 வயதிற்கு மேல் இருத்தல் வேண்டும். பிறந்த தேதிக்கான சான்று மற்றும் திட்டத்தில் முன்னுரிமை பெற வேண்டுமானால் கைம்பெண்கள், ஆதரவற்ற பெண்கள் அல்லது கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் என்பதற்கான சான்று (வட்டாட்சியரிடம் பெறுதல் வேண்டும்) போன்றவற்றை சமர்ப்பிக்க வேண்டும். ஆண்டு வருமான வரம்பு ரூ.1.20 லட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.எனவே, இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் மகளிர் சென்னை மாவட்ட ஆட்சியரகம், சிங்கார வேலனார் மாளிகை, 8வது தளத்தில் செயல்படும் மாவட்ட சமூக நல அலுவலகத்தில் வருகிற 1ம் தேதிக்குள் (நாளை) விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.இத்திட்டத்திற்கு தகுதியுள்ள பயனாளிகள் அரசால் நியமிக்கப்பட்ட தேர்வு குழுவால் தெரிவு செய்யப்படுவர். இதர விவரங்களுக்கு மாவட்ட சமூகநல அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஓட்டேரி பகுதியில் சொத்து பிரச்சனை காரணமாக இருசக்கர வாகனம் தீ வைப்பு: உறவினர் கைது

**சென்னை ஆக 31-** சென்னை, ஓட்டேரி, டேங்க் பங்க் ரோட்டில் உள்ள ஒரு வீட்டின் முதல் தளத்தில் வசந்தகுமார், என்பவர் குடும்பத்துடன் வசித்து வருவதாகவும், கீழ்தளத்தில் தனது அண்ணன் குடும்பத்துடன் வசித்து வருவதாகவும், தான் ஒரு மருத்துவரின் கார் ஓட்டுநராக பணிபுரிந்து வருவதாகவும், நான் வேலைக்கு வருவதற்காக மருத்துவர் கொடுத்த யமஹா இருசக்கர வாகனத்தை பயன்படுத்தி வருவதாகவும், அண்ணனின் மகன் விக்னேஷ் என்பவர் அடிக்கடி தான் வசிக்கும் வீட்டை காலி செய்து எங்களுக்கே கொடுத்துவிடு என மிரட்டி வந்த நிலையில், கடந்த 28.ச் தேதி அன்று இரவு மீண்டும் தன்னிடம் வீட்டை ஒப்படைத்துவிட்டு செல் என கூறியபோது நான் முடியாது என கூறியதால் விக்னேஷ் தகாத வார்த்தைகளால் பேசி சென்றதாகவும், எனது செல்போனில் அழைத்த பக்கத்து வீட்டு நபர் உனது இருசக்கர வாகனம் எரிந்து கொண்டிருப்பதாக கூறியதன்பேரில், நான் எழுந்து வந்து வெளியே பார்த்தபோது, நான் வாசலில் நிறுத்தியிருந்த யமஹா இருசக்கர வாகனத்தை விக்னேஷ் எரித்துவிட்டு கொலை மிரட்டல் விடுத்து மிரட்டி சென்றதாகவும், வீட்டிலிருந்தவர்கள் உதவியுடன் இருசக்கர வாகனத்தின் தீயை அணைத்ததாகவும், தனது இருசக்கர வாகனத்தை தீ வைத்து எரித்த விக்னேஷ் மீது நடவடிக்கை எடுக்கும்படியும், வசந்தகுமார் என்பவர் ஓட்டேரி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். ஓட்டேரி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான போலீசார் சம்பவயிடத்தில் தீவிர விசாரணை செய்து மேற்படி இருசக்கர வாகனத்தை தீ வைத்து எரித்த விக்னேஷ், என்பவரை கைது செய்தனர்.

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within three months there after. I, Ramya Krishnaveni, D/o Kaliyaperumal, aged 22 years, permanently residing at No.23, Veerapandi Nagar, Thirumalairayan Pattinam, Karaikal Taluk, Puducherry 609 606. Intend having my enrollment as an Advocate moved before the bar council of Tamil Nadu, bar council building, high Court Campus, Chennai-600104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

Ramya Krishnaveni

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within three months there after. I, Mahalakshmi D/o. Selvaraju, aged 54 years, permanently residing at No.48, Car Street, Pillaichavady, Puducherry - 605 014. Intend having my enrollment as an Advocate moved before the bar council of Tamil Nadu, bar council building, high Court Campus, Chennai-600104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

Mahalakshmi

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within three months there after. I, Hindhumathy D/o Dharmamuthuraja, aged 23 years, permanently residing at No.09, 4th cross, Jayaram Chetty Thottam, Vanarapet, Puducherry - 605 001. Intend having my enrollment as an Advocate moved before the bar council of Tamil Nadu, bar council building, high Court Campus, Chennai-600104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

Hindhumathy

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within three months there after. I, YUVARAJA S/o NADARADJAN, aged 23 years, permanently residing at No.58, Lawspet Main Road, Krishna Nagar, Pondicherry, Puducherry-605 008. Intend having my enrollment as an Advocate moved before the bar council of Tamil Nadu, bar council building, high Court Campus, Chennai-600104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

YUVARAJA

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within three months there after. I, M. Himathrija D/o N. Mounissamy, aged 50 years, permanently residing at No.12, Kannadasan Street, Kamaraj Nagar, Puducherry-605 011. Intend having my enrollment as an Advocate moved before the bar council of Tamil Nadu, bar council building, high Court Campus, Chennai-600104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

M. Himathrija

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within three months there after. I, Sivasubramanian. P, S/ Palanisamy, aged 22 years, permanently residing at No. C139, First Cross Street, Kailasanathar Nagar, Kariyamanickam, Pondicherry - 605106. Intend having my enrollment as an Advocate moved before the bar council of Tamil Nadu, bar council building, high Court Campus, Chennai-600104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

Sivasubramanian. P

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within three months there after. I, Jeeva, S/O. Viruthagiri, aged 22 years, permanently residing at No.49A, 1st Cross Street, Extension, Rainbow Nagar, Puducherry 605011. Intend having my enrollment as an Advocate moved before the bar council of Tamil Nadu, bar council building, high Court Campus, Chennai-600104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

Jeeva

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within three months there after. I, V. ANANDHAVEL, S/o Velmurugan, aged 23 years, permanently residing at 3, Iyyanar Koil St, Raja Nagar, Orleanpet, Puducherry 13. Intend having my enrollment as an Advocate moved before the bar council of Tamil Nadu, bar council building, high Court Campus, Chennai-600104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

V. ANANDHAVEL

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within three months there after. I, M. MUGUNTHAN, S/o MURALI, aged 22 years, permanently residing at NO 59, Market Street, Nellithope, Puducherry-605005. Intend having my enrollment as an Advocate moved before the bar council of Tamil Nadu, bar council building, high Court Campus, Chennai-600104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

M. MUGUNTHAN

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within three months there after. I, K. Rajasekaran S/o Kuppusamy, aged 40 years, permanently residing at No 334,k kuchipalayam, kattamuthupalayam (po) panruti (Tk) 607205. Intend having my enrollment as an Advocate moved before the bar council of Tamil Nadu, bar council building, high Court Campus, Chennai-600104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

K. Rajasekaran

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within three months there after. I, V. JAWAHAR BABU, S/O. P. VEERAPPAN, aged 44 years, permanently residing at KAMARAJAR STREET, VALUDAREDDY (P.O), VILLUPURAM (D.K) 605 401. Intend having my enrollment as an Advocate moved before the bar council of Tamil Nadu, bar council building, high Court Campus, Chennai-600104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

V. JAWAHAR BABU

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within three months there after. I, V. SIVAPRAKASH, S/o S.Vinayagam, aged 22 years, permanently residing at 237, Ranga Pillai Street Pondicherry 605001. Intend having my enrollment as an Advocate moved before the bar council of Tamil Nadu, bar council building, high Court Campus, Chennai-600104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

V. SIVAPRAKASH

மேன்மைமிகு இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், புதுச்சேரி

O.S.NO. 776/2025

1. திருமதி. ஜெயகௌசல்யா
2. தனலட்சுமி
3. கவிதா
4. திருமலைசெல்வன்

......... வாதிகள்

எதிர்

திருமதி. ராஜேஸ்வரி

............ பிரதிவாதி

பொது அறிவிப்பு

கடந்த 11.04.2025 அன்று புதுவை, காலாப்பட்டு பிம்ஸ் மருத்துவமனையில் காலமான ரமணி த/பெ. கிருஷ்ணன் அவர்களின் வாரிசுகள் தாங்கள்தான் என்று அறிவிக்க கோரி வாதிகள் மேற்படி வழக்கை மேற்கண்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள். இவ்வழக்கு எதிர்வரும் 11.09.2025 அன்று காலை 10 மணிக்கு விசாரணைக்கு வைக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கு சம்பந்தமாக யாருக்கேனும் ஆட்சேபனை ஏதேனும் இருப்பின் மேற்படி தேதியில் ஆஜராகி தெரிவிக்க வேண்டியது. தவறும் பட்சத்தில் வழக்கு வாதிகளுக்கு அனுகூலமாக தீர்மானிக்கப்படும் என்பதனை இதன் மூலம் அறியவும்.

T. குணசேகரன்,
வழக்கறிஞர்,
புதுச்சேரி.

IN THE COURT OF THE HON'BLE MOTOR ACCIDENT CLAIMS TRIBUNAL (ADD. TRIBUNAL) AT PONDICHERRY

MA.C.T.O.P. No. 3/14 /2025

Paqiasamy

...........Petitioner

Vs.

1. Viyasanthini
2. The Branch Manager, United India Insurance Co. Ltd, Pondicherry.

.........Respondents

பொது அறிவுப்பு

மேற்கண்ட மனுதாரர் கடந்த 07-11-2024 அன்று தனக்கு ஏற்பட்ட சாலை விபத்துக்காக மேற்கண்ட கணம் நீதிமன்றத்தில் இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்துள்ளார் இம் மனு வருகின்ற 22-09-2025 அன்று விசாரணைக்கு வைக்கப்பட்டு ள்ளது இம் மனுவில் மேற்கண்ட எதிர் மனுதாரருக்கோ அல்லது வேறு யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் வருகின்ற 22-09-2025 அன்று காலை 10 மணி அளவில் தாங்களோ அல்லது தங்களின் வழக்கறிஞர் மூலமாகவோ மேற்கண்ட கணம் நீதிமன்றத்தின் நேரில் ஆஜாராகி தங்களின் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம் தவறும் பட்சத்தில் ஒரு தலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதனை இந்த அறிவிப்பு மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது

R. DHINAGARAN,
Advocate, Pondicherry.

IN THE COURT OF THE HONOURABLE PRINCIPAL DISTRICT JUDGE AT PONDICHERRY

I.A. No.3/2025 IN O.S. No.55/2025

BETWEEN:

Bhuvanesvary

.........Petitioner/Plaintiff

AND

Muniyammal @ Jeeva

To-Respondent/Defendant

Tmt. Muniyammal @Jeeva
W/o Kothandam,
No.83,84, 2* Cross Street,
Thirupurkumaran Nagar,
Velrampet,
Puducherry-605004

..........Respdt/Defendant

NOTICE

Take notice that the above said Petitioner Plaintiff has filed the above I.A.No.3/2025 for attachment before judgement and you are requested to attend in person or through pleader on 14.10.2025 before the Hon'ble court and file the objection if any and failing which the matter will be decided on merits.

A.LATCHOUMICANDANE,
Advocate, Pondicherry.

# கடலூர் மாவட்டத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாம்

## மாவட்ட கலெக்டர் சி.பி.ஆதித்யா செந்தில்குமார் தொடங்கி வைத்தார்



**கடலூர் ஆக 31-**
கடலூர் மாவட்டம், கம்மியம்பேட்டை புனித வளனார் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு உயர்மருத்துவ சேவை முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா ஆகியோர் முன்னிலையில் (30.08.2025) தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் உடல் நலத்தினை பேணும் வகையிலும், சாதாரண பொதுமக்கள் தனியார் மருத்துவமனைகளுக்கு சென்று கட்டணம் செலுத்தி சிகிச்சை பெற இயலாதவர்களுக்காகவும் 02.08.2025 அன்று "நலம் காக்கும் ஸ்டாலின்" எனும் புதிய திட்டத்தை சென்னையில் தொடங்கி வைத்தார். இம்முகாமானது கடலூர் மாவட்டத்தில் 13 வட்டாரத்திற்கு 3 முகாம்கள் வீதம் 39 முகாம்கள் ஊரகப்பகுதிகளிலும், கடலூர் மாநகராட்சியில் 4 முகாம்கள் என மொத்தம் 43 மருத்துவ முகாம்கள் பிரதிவாரம் சனிக்கிழமை தோறும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரையில் குறிஞ்சிப்பாடி, திட்டக்குடி மற்றும் காட்டுமன்னார்கோயில் ஆகிய மூன்று இடங்களில் நடத்தப்பட்டுள்ளது. 3,031 பயனாளிகள் கலந்துகொண்டனர். 2,641 நபர்களுக்கு இரத்தப் பரிசோதனை செய்து ஆய்வு முடிவுகள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1,921 நபர்களுக்கு இ.சி.ஜி பரிசோதனைகளும், 236 நபர்களுக்கு எக்ஸ் ரே பரிசோதனைகளும், 161 நபர்களுக்கு ஸ்கேன் பரிசோதனைகளும், 275 நபர்களுக்கு இதய பரிசோதனைகளும் செய்யப்பட்டுள்ளது. 195 நபர்களுக்கு புதியதாக முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது. 142 நபர்களுக்கு மாற்றுத்திறனாளி சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளது.

இச்சிறப்பு முகாம்களில் இரத்த அழுத்த பரிசோதனை மற்றும் அனைத்து பயனாளிகளுக்கும் இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, மூமையான இரத்த அணுக்களின் எண்ணிக்கை, இரத்த சர்க்கரை, சிறுநீரக செயல்பாட்டு பரிசோதனைகள் செய்யப்பட்டு, மருத்துவ முகாமிலேயே மருத்துவ பயனாளிகளின் பரிசோதனை விவரங்கள் அவர்களுக்கு குறுஞ்செய்திவாயிலாக உடனடியாக தெரிவிக்கப்படுகிறது. இம்முகாம்களில் அடிப்படை மற்றும் உயர்நிலை மருத்துவப் பரிசோதனைகளுடன் முழுமையான உடல் ஆரோக்கியப் பரிசோதனைகளும், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், காசநோய் மற்றும் தொழுநோய் கண்டறியும் பரிசோதனைகளும், ஆரம்பகட்ட புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுகிறது. அறுவை சிகிச்சை, எலும்பியல், மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவம். குழந்தை மருத்துவம், இருதயவியல், நரம்பியல், தோல் மருத்துவம். பல் மருத்துவம். கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மனநல மருத்துவம். நுரையீரல் மருத்துவம் உள்ளிட்ட பதினைந்து மருத்துவ பிரிவுகளைச் சார்ந்த நிபுணர்கள் மூலம் சிகிச்சைகளும், மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட உள்ளன.

இம்முகாம்கள் உள்ளாட்சி அமைப்புகள், பள்ளிக்கல்வித் துறை. உயர்கல்வித் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை. தொழிலாளர் நலன் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து செயல்படுகிறது. மேலும் பொது மருத்துவ நிபுணரின் அறிவுறுத்தலின் படி எக்ஸ்-ரே, எக்கோ கார்டியோகிராம், அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் பரிசோதனைகளும் செய்யப்படுகிறது. பரிசோதனைகள் மற்றும் மருத்துவ சேவைகள் மட்டுமின்றி முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் பதிவு செய்தல் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு அங்கீகாரசான்றிதழ் இம்முகாமிலேயே வழங்கப்படுகிறது. எனவே, பொதுமக்கள் அனைவரும் "நலம் காக்கும் ஸ்டாலின்" உயர் மருத்துவ சேவை முகாமில் அளிக்கப்படும் சேவைகளை பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்தார் இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி துணை மேயர் பா.தாமரைச்செல்வன், மாவட்ட வருவாய் அலுவலர் ம.இராஜசேகரன், மாநகராட்சி ஆணையாளர் மரு.எஸ். அனு மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பொற்கொடி, இணை இயக்குநர் மருத்துவ நலப்பணிக (பொ.) மரு. குமார், மாநகராட்சி சுகாதார அலுவலர் மரு. பரிதாவாணி, துறை அலுவலர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



புதுச்சேரி ராஜ்பவன் தொகுதி ஏழை மாணவன் கல்விக்கூடம் செல்ல பாஜக தலைவர் சப்தகிரி.வி.பி.ராமலிங்கம் தனது சொந்த நிதியில் மாணவனுக்கு சைக்கிளை வழங்கினார் . அருகில் மாவட்ட வல்லுனர் பிரிவு தலைவர் நாகராஜன் மற்றும் பாஜக நிர்வாகிகள் உள்ளனர்



புதுச்சேரி முத்தியால்பேட்டை வ.உ.சி நகரில் விநாயகர் சதுர்த்தியின் நான்காம் நாள் நிகழ்ச்சியில் திமுக தலைமை பொதுக்குழு உறுப்பினர் மு.பிரபாகரன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று சாமி தரிசனம் செய்தார்.அவருக்கு வ.உ.சி.நகர் இளைஞர்கள் சால்வை அணிவித்து பூரண கும்பம் மரியாதை அளித்தனர்.

### விழுப்புரம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில்

# நீர் நிலை மற்றும் பாசன கணக்கெடுப்புக்கான துணைக்குழு கூட்டம்

## கலெக்டர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமையில் நடைபெற்றது



**விழுப்புரம் ஆக 31-**
மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான். அவர்கள் தலைமையில் நீர் நிலை மற்றும் பாசன கணக்கெடுப்புக்கான மாவட்ட அளவிலான துணைக்குழு கூட்டம் (30.08.2025) நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்: ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் நீர் வள ஆதார அமைச்சகத்தின் கீழ் 7- வது சிறுபாசன கணக்கெடுப்பு, 2 - வது நீர் நிலைகள் பற்றிய கணக்கெடுப்பு, முதலாவது நடுத்தர மற்றும் பெரிய பாசன திட்டம் மற்றும் முதலாவது நீர் ஊற்று கணக்கெடுப்பு என மொத்தம் நான்கு நீர் நிலை மற்றும் பாசன கணக்கெடுப்பு 2023-24 ஆம் ஆண்டினை அடிப்படை ஆண்டாக கொண்டு இக்கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. விழுப்புரம் மாவட்டத்தில் இக்கணக்கெடுப்பிற்கான மாவட்ட அளவிலான துணைக்குழு கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். மேலும், இக்கூட்டத்தில் பணி முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதில் அனைத்து வருவாய் வட்டாட்சியர்களும் உடனடியாக சிறப்பு கவனம் செலுத்தி செப்டம்பர்- 2025 மாதத்திற்குள் இக்கணக்கெடுப்பினை முடிக்க அறிவுறுத்தப்பட்டது. மேலும், பெரிய நடுத்தர மற்றும் நீர் ஊற்று கணக்கெடுப்பு தொடர்புடைய பொதுப் பணித் துறை (நீர் வளம் மற்றும் நிலத்தடி நீர்) மூலம் பணியினை விரைவு படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டது என மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான். அவர்கள் தெரிவித்தார்.இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கி.அரிதாஸ், சார் ஆட்சியர், திண்டிவனம் அ.ல.ஆகாஷ் விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், புள்ளிஇயல் துணை இயக்குநர் இரா.லதா மற்றும்; துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டார்கள்.

### நாட்டார் மங்கலத்தில்

# நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாம்: செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்



**செஞ்சி ஆக -31,**
விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் நாட்டார் மங்களம் தனியார் பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் முகாம் நடைபெற்றது. விழுப்புரம் மாவட்ட சுகாதார இணை இயக்குனர் பொறுப்பு லதா தலைமை தாங்கினார். வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் முன்னிலை வகித்தார். விழுப்புரம் மாவட்ட மருத்துவ சுகாதார அலுவலர் செந்தில்குமார் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ குத்து விளக்கு ஏற்றிவைத்து முகாமினை தொடங்கி வைத்தார். முகாமில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, துரை, இளம்வழுதிமாவட்ட கவுன்சிலர்கள் அன்பு செழியன்,சசிகலா மோகனசுந்தரம்உள்ளிட்ட உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முகாமில் பொது மருத்துவம், இதயம், எலும்பு, நரம்பியல், தோல் ,மகப்பேறு, குழந்தைகள் நலன், நுரையீரல், அறுவை சிகிச்சை, கண் காது மூக்கு தொண்டை, மனநலம் ,பல், சித்தா, இயன்முறை சிகிச்சை, கதிர் இயக்க சிகிச்சை, மற்றும் சர்க்கரை நோய் உள்ளிட்ட 17 வகை மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டது. முகாமில் பங்கேற்றவர்களுக்கு ரத்தப் பரிசோதனை இசிஜி உள்ளிட்ட பரிசோதனைகள் இலவசமாக செய்யப்பட்டது. மேலும் மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்டவர்களுக்கு எக்கோ, கார்டியாகிராம், எக்ஸ்ரே அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் முதல்வரின் மருத்துவ காப்பீட்டு அட்டை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ சான்றிதழ்கள் முகாமில் வழங்கப்பட்டது . இந்த முகாமில் 2300 க்கும் மேற்பட்டவர்களுக்கு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டன. மருத்துவ முகாமில் பயனடைந்தவர்கள் அனைத்து நோய்களுக்கும் ஒரே இடத்தில் தீர்வு காணப்படுவதால் வயதானவர்கள் எந்த ஒரு சிரமமும் இன்றி தங்களது உடல்நிலை ஒரே இடத்தில் பரிசோதனை செய்துஅந்தந்த சிகிச்சைக்கு தேவையான மருந்து மாத்திரைகள் மருத்துவர்கள் கொடுத்து அனுப்புகின்றனர் இது போன்ற ஒரு உன்னதமான திட்டத்தைஅறிவித்து செயல்படுத்துகின்ற தமிழ்நாடு முதலமைச்சருக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துள்ளனர்.



புதுச்சேரி கோட்டகுப்பம்ரஹமத்நகரில்கொசுஒழிப்பு மருந்து அடிக்கும் பணியினை நகராட்சி ஊழியர்கள் ஈடுபட்டனர்.

# டவுன் ஹால் சங்கம் சார்பில் சார்பில் அன்னதானம்



**அரக்கோணம் ஆக 31**
ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் அரசு மருத்துவமனை எதிரில் தி டவுன் ஹால் சங்கம் உள்ளது. மிகவும் பழமை மிக்க இச்சங்கத்தின் புதிய நிர்வாகிகள் நடந்து முடிந்த தேர்தலில் தேர்ந்தெடு க்கப்பட்டனர். இந்நிலையில் புதிய நிர்வாகம் சார்பில் வாரம்தோறும் அன்னதானம் வழங்க முன் வந்தது அதன்படி நேற்று சங்க தலைவர் ஜிகே. பாபு ஜீ தலைமையில் சிறப்பு விருந்தினராக பொது செயலாளர் டாக்டர் பன்னீர் செல்வம் கலந்து கொண்டு ஜிவி ஜெய்சங்கர் பிறந்த நாளை முன்னிட்டு வழங்கபடும் அன்னதானத்தை

துவக்கி வைத்தார் முன்னதாக பொதுச் செயலாளர் பன்னீர்செல்வம் மற்றும் ஜிவி ஜெய்சங்கருக்கு சமூக நல பொறுப்பாளர் முருகவேல் மற்றும் பூக்கடை சாய் பொன்னாடை போர்த்தி வரவேற்றனர் நிகழ்ச்சியில் அதிமுக நகர செயலாளர் பாண்டுரங்கன் முன்னாள் கவுன்சிலர் எஸ்.சரவணன் உட்பட சங்க நிர்வாகிகள் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் அங்கத்தினர்கள் பலர் திரளாக கலந்து கொண்டு அன்னதானம் வழங்கினர்

# ஆலம்பூண்டியில் முதல்வரின் பிறந்தநாளை முன்னிட்டு இலவச கண் சிகிச்சை முகாம்

## சேர்மன் விஜயகுமார் துவக்கி வைத்தார்



**செஞ்சி ஆக -31,**
விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் ஆலம்பூண்டி ஊராட்சியில்தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டுவிழுப்புரம் மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம், தேசிய தெய்வீக சேவா தளம் அறக்கட்டளை மற்றும் பாண்டிச்சேரி அரவிந்த் கண் மருத்துவமனை சார்பில் இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு தேசிய தெய்வீக சேவா தளம் தர்ம அறக்கட்டளையின்நிறுவனத் தலைவர் முத்து சந்தனவேல் தலைமை தாங்கினார்.அறக்கட்டளையின் நிர்வாகிகள் ராஜேஸ்வரி, அன்புராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்டத் தலைவர் ரமேஷ் அனைவரையும் வரவேற்றார் . நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் கலந்து கொண்டு மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாமைதொடங்கி வைத்தார். முகாமில்புதுச்சேரி அரவிந்த் கண் மருத்துவமனை மருத்துவர்கள் சுனில், ஐஸ்வர்யா ஆகியோர் தலைமையிலான மருத்துவர்கள் கலந்து கொண்டு முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு கிட்ட பார்வை, தூரப்பார்வை, கண்ணீர் அழுத்தம், உள்ளிட்ட கண் சம்பந்தமான நோய்களுக்கு சிகிச்சை அளித்தனர்.மேலும் கண் அறுவை சிகிச்சைக்காக சுமார் 20க்கும் மேற்பட்டோர் தேர்வு செய்யப்பட்டு புதுச்சேரி அரவிந்த் கண் மருத்துவமனைக்குஅழைத்துச் சென்றனர். முகாமில் 300-க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன், ஒன்றிய கவுன்சிலர் கேமல், ஊராட்சி மன்ற தலைவர் முத்தம்மாள் சேகர், ஒன்றிய அவை தலைவர் வாசு, மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை, ஊராட்சி நிர்வாகிகள் அண்ணாமலை, அன்பழகன், பூக்கடை சிவா, ராமதாஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No. 61, Cuddalore Main Road, Mudaliyarpet, Puducherry-4.
Ph:0413-2280613
E-Mail: pondyedi@thinaboomi.com
RNI.Regn No.Pontam 2002/7660
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

மழைநீர் உயிர்நீர்

# கடலூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள்

## மாவட்ட கலெக்டர் சி.பி.ஆதித்யா செந்தில்குமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார்

**கடலூர் ஆக 31-**
கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கோண்டூர், நத்தப்பட்டு, திருப்பணாம்பாக்கம், உள்ளேரிப்பட்டு ஆகிய பகுதிகளில் ஊரக வளர்ச்சித் துறையின் வாயிலாக மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டப்பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் (30.08.2025) பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஊரக மக்களின் நலன் கருதி கிராமப்புறங்களில் சாலை, குடிநீர், குடியிருப்பு வசதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை பல்வேறு திட்டங்களின் வாயிலாக மேம்படுத்தப்பட்டு வருகிறது. கடலூர் ஊராட்சி ஒன்றியத்தில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 2024-25 ஆம் ஆண்டிற்கு 287 வீடுகளும் 2025 -26 ஆம் ஆண்டிற்கு 477 வீடுகளும் என மொத்தம் 764 வீடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. கோண்டூர் மற்றும் நத்தப்பட்டு ஊராட்சியில் மாபெரும் தூய்மை பணிகளாக கஸ்டம்ஸ் சாலை பகுதியில் குப்பைகள் முறையாக அகற்றுவதை பார்வையிட்டு, குப்பைகளால் பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படாவண்ணம் அகற்றிடவும், மேலும் சுகாதார சீர்கேடு ஏற்படும் வகையில் சாலையோரங்கள் மற்றும் பொதுஇடங்களில் குப்பைகளை கொட்டுபவர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. திருப்பனாம்பாக்கம் ஊராட்சியில் பொதுநிதி மற்றும் 15ஆவது நிதிக்குழு மானியத் திட்டத்தின் கீழ் ரூ.24 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கப்படவுள்ளது குறித்தும், அனைத்து ஊராட்சிகளிலும் நடைபெற்றுவரும் சாலைப் பணிகள், வடிகால் பணிகள், பள்ளிக் கட்டடங்கள் உள்ளிட்ட பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்து அலுவலர்கள் தொடர் கண்காணிப்பு மேற்கொண்டு மழைக்காலம் தொடங்குவதற்கு முன் விரைந்து முடித்திடவும், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை தொடர்ச்சியான முறையில் சுத்தம் செய்து அனைத்து வீடுகளுக்கும் பாதுகாப்பான குடிநீர் விநியோகம் செய்யப்படுவதை உறுதிசெய்யவும், கிராமப் பகுதிகளில் தெருவிளக்குகளை கண்காணித்து பழுது ஏற்பட்டுள்ள தெருவிளக்குகளை சீரமைத்திடவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

## பெங்களூரு கூட்ட நெரிசல் சம்பவம்:
# உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு நிதியுதவி அறிவித்த ஆர்.சி.பி. அணி



**பெங்களூரு, ஆக. 31-**

பெங்களூரு கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிதியுதவி வழங்கப்படும் என ஆர்.சி.பி. அணி நிர்வாகம் அறிவித்துள்ளது. இதன்படி, ஐ.பி.எல். வெற்றிக் கொண்டாட்டத்தில் உயிரிழந்த 11 பேரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.25 லட்சம் நிதியுதவி வழங்கப்படும் என ஆர்.சி.பி. அணி நிர்வாகம் அறிவித்துள்ளது

**சின்னசாமி மைதானத்தில்....**

2025 ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி முதல் முறையாக வெற்றி பெற்று கோப்பையை கைப்பற்றியது. இதனை கொண்டாடும் விதமாக பெங்களூரு சின்னசாமி கிரிக்கெட் மைதானத்தில் கடந்த ஜூன் மாதம் 4-ந்தேதி ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு(ஆர்.சி.பி.) அணி சார்பில் வெற்றிக் கொண்டாட்ட பேரணி நடந்தது. இதில் பங்கேற்க லட்சக்கணக்கான ரசிகர்கள் சின்னசாமி கிரிக்கெட் மைதானம் முன்பு திரண்டனர்.

**11 பேர் உயிரிழப்பு...**

இதனால் அங்கு கூட்ட நெரிசல் ஏற்பட்டு 11 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர். நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்திய இந்த சம்பவம் தொடர்பாக ஆர்.சி.பி. அணி, கர்நாடக மாநில கிரிக்கெட் சங்கம் மற்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் மீது பெங்களூரு காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்தனர். மேலும், காவல் துறை உயர் அதிகாரிகள் 5 பேரை சஸ்பெண்ட் செய்து கர்நாடக மாநில அரசு உத்தரவிட்டது. பின்னர் அந்த உத்தரவு வாபஸ் பெறப்பட்டது.

**குடும்பத்தினருக்கு....**

இந்த நிலையில், பெங்களூரு கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிதியுதவி வழங்கப்படும் என ஆர்.சி.பி. அணி நிர்வாகம் அறிவித்துள்ளது. இதன்படி, ஐ.பி.எல். வெற்றிக் கொண்டாட்டத்தில் உயிரிழந்த 11 பேரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.25 லட்சம் நிதியுதவி வழங்கப்படும் என ஆர்.சி.பி. அணி நிர்வாகம் அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## 12-வது ஆசிய ஹாக்கி போட்டி:
# இந்தியா- ஜப்பான் மோதல்

**டெல்லி, ஆக. 31-**

12-வது ஆசிய கோப்பை ஹாக்கி போட்டி பீகாரில் உள்ள ராஜ்கிர் நகரில் நேற்று முன்தினம் தொடங்கியது.

இந்தப் போட்டியில் 8 நாடுகள் பங்கேற்றுள்ளன. அவை 2 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. இந்திய அணி ஏ பிரிவில் இடம்பெற்றுள்ளது. சீனா, ஜப்பான், கஜகஸ்தான் ஆகிய நாடுகளும் அந்த பிரிவில் உள்ளன. நேற்று முன்தினம் தொடக்க ஆட்டத்தில் இந்திய அணி 4-3 என்ற கோல் கணக்கில் சீனாவை தோற்கடித்தது. மற்ற ஆட்டங்களில் மலேசியா 4-1 என்ற கோல் கணக்கில் வங்காள தேசத்தையும், தென் கொரியா 7-0 என்ற கணக்கில் சீன தைபேயையும் (பி பிரிவு), ஜப்பான் 7-0 என்ற கணக்கில் கஜகஸ்தானையும் வீழ்த்தின.



இந்திய அணி 2-வது ஆட்டத்தில் ஜப்பானை நாளை எதிர்கொள்கிறது. மாலை 3 மணிக்கு இந்த ஆட்டம் நடக்கிறது. நாளை நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் சீனா-கஜகஸ்தான் அணிகள் மோதுகின்றன. நேற்று நடைபெறும் ஆட்டங்களில் வங்காள தேசம்-சீனதைபே, தென் கொரியா-மலேசியா அணிகள் மோதுகின்றன.

# ஸ்ரீசாந்த் விவகாரம்: மனைவி ஆவேசம்

**டெல்லி, ஆக. 31-**

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி 2008-ம் ஆண்டு அறிமுகம் ஆனது. முதலாவது சீசனில் மொகாலியில் நடந்த ஆட்டத்தில் மும்பை அணி தோற்ற பிறகு திடீரென மும்பை இந்தியன்ஸ் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங், பஞ்சாப் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்தை கன்னத்தில் 'பளார்' விட்டது பரபரப்பை ஏற்படுத்தியது. கன்னத்தில் கைவைத்தபடி ஸ்ரீசாந்த் தேம்பி தேம்பி அழுதது அனைவரையும் கலங்க வைத்தது. ஆனால் இது தொடர்பான வீடியோ காட்சி மறைக்கப்பட்டது. சம்பவம் குறித்து விசாரணை நடத்திய இந்திய கிரிக்கெட் வாரியம் அந்த சீசனில் எஞ்சிய 11 ஆட்டங்களிலும், 5 ஒரு நாள் போட்டிகளிலும் விளையாட ஹர்பஜன்சிங்குக்கு தடை விதித்தது. அதன் பிறகு பலக் கட்டங்களில் ஹர்பஜன் சிங்கிடமும் சரி, ஸ்ரீசாந்திடமும் சரி எதற்காக இருவரிடையே சண்டை ஏற்பட்டது என கேட்கப்பட்ட போது பதில் சொல்லாமல் சிரித்தே மழுப்பினர்.

இந்த நிலையில் 17 ஆண்டுக்கு பிறகு ஸ்ரீசாந்தை, ஹர்பஜன்சிங் கன்னத்தில் அறைந்த அந்த சர்ச்சைக்குரிய வீடியோ காட்சி இப்போது வெளியாகி வைரலாகி வருகிறது. ஆட்டம் முடிந்து வீரர்கள் கைகுலுக்கும் போது, ஹர்பஜன்சிங், ஸ்ரீசாந்தின் கன்னத்தில் தடாலடியாக அடிப்பதும், பிறகு இருவரும் ஒருவரையொருவர் அடிப்பது போல் பாயும் போது நடுவர்கள், சக வீரர்கள் சமாதானப்படுத்துவதும் அந்த வீடியோவில் இடம் பெற்றுள்ளது. இப்போதும் அவர்கள் எதற்காக மோதிக் கொண்டார்கள், ஹர்பஜன் சிங்கை கோபமூட்டும் வகையில் ஸ்ரீசாந்த் என்ன சொன்னார் என்பது மர்மமாகவே உள்ளது.

இந்த நிலையில், வீடியோ வெளியானதற்கு இந்திய முன்னாள் வீரர் ஸ்ரீசாந்தின் மனைவி புவனேஷ்வரி கடுமையாக விமர்சித்துள்ளார். அவர் கூறியிருப்பதாவது:-

லலித் மோடி, மைக்கேல் க்ளார்க் உங்கள் இருவரையும் பார்க்க வெட்கமாக இருக்கிறது. மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக 2008-ல் நடந்த ஒரு சம்பவத்தை நீங்கள் இழுப்பதை பார்க்கும் போது மனிதாபிமானமற்றவர்களாக தெரிகிறீர்கள். அந்த சம்பவத்தில் இருந்து ஹர்பஜனும், ஸ்ரீசாந்தும் மீண்டு வந்துவிட்டனர். ஆனாலும் அந்த பழைய காயத்தை நீங்கள் மீண்டும் கிளறி விடுகிறீர்கள். இது அருவருப்பாக உள்ளது என கூறியுள்ளார்.

## முத்தரப்பு டி20 கிரிக்கெட் தொடர்:
# வெற்றியுடன் தொடங்கிய பாகிஸ்தான்

**சார்ஜா, ஆக. 31-**

ஆசிய கோப்பை தொடருக்கு தயாராகும் பொருட்டு பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் (யுஏஇ) அணிகள் இடையே முத்தரப்பு டி20 தொடர் நடைபெறுகிறது. அதன்படி இந்த தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது. இதன் முதலாவது ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் அணிகள் விளையாடின.

இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 182 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக கேப்டன் சல்மான் ஆகா 53 ரன்கள் அடித்தார். ஆப்கானிஸ்தான் தரப்பில் பரீத் அகமது 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார். பின்னர் 183 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற கடின இலக்கை நோக்கி களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணி ஆரம்பம் முதலே பாகிஸ்தான் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் திணறியது. தொடக்க ஆட்டக்காரர் ஆன குர்பாஸ் (38 ரன்கள்), ரஷித் கான் (39 ரன்கள்) தவிர மற்ற பேட்ஸ்மேன்கள் யாரும் சிறப்பாக செயல்படவில்லை. 19.5 ஓவர்கள் தாக்குப்பிடித்த அந்த அணி 143 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் பாகிஸ்தான் 39 ரன்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது. பாகிஸ்தான் தரப்பில் ஹரிஸ் ரவூப் 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதில் நேற்று நடைபெறும் 2-வது ஆட்டத்தில் பாகிஸ்தான் - யுஏஇ அணிகள் மோதுகின்றன.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# சீனா சென்றடைந்த பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு



**பீஜிங், ஆக. 31-**

சீனா சென்றடைந்த பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஆசிய நாடுகளில் ஒன்றான ஜப்பான் நாட்டுக்கு பிரதமர் நரேந்திர மோடி 2 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இதற்காக அந்நாட்டுக்கு அவர் நேற்று முன்தினம் சென்றார். இதன்பின்னர் தலைநகர் டோக்கியோவில் நடந்த இந்தியா-ஜப்பான் பொருளாதார மன்றத்தில் பங்கேற்று உரையாற்றினார். தொடர்ந்து ஜப்பான் பிரதமர் ஹிகேரு இஷிபாவை சந்தித்து பேசினார். ஜப்பானில் 16 மாகாண கவர்னர்களை சந்தித்து பேசினார். இந்நிலையில், ஜப்பான் நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட பிரதமர் மோடி, அதனை முடித்துவிட்டு சீனாவுக்கு புறப்பட்டார்.

சீனாவின் தியான்ஜின் நகரில் ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு நேற்று மற்றும் நாளை என 2 நாட்கள் நடக்கிறது. இதில் பிரதமர் மோடி, ரஷிய அதிபர் விளாடிமிர் புதின் மற்றும் சீன அதிபர் ஜின்பிங் உள்ளிட்ட பல்வேறு உலக நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கின்றனர். இந்த மாநாட்டை தொடர்ந்து ரஷிய அதிபரை பிரதமர் மோடி சந்தித்து பேச உள்ளார். இந்நிலையில் அவர் சீனாவை சென்றடைந்து உள்ளார். அவருக்கு அந்நாட்டு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

சீன அதிபர் ஜின்பிங்கின் அழைப்பை ஏற்று சென்றுள்ள அவர், ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டுக்கு பின்னர் ஜின்பிங்கை சந்தித்து பேச இருக்கிறார். அமெரிக்காவின் 50 சதவீத வரி விதிப்பு அமலுக்கு வந்துள்ள சூழலில், இந்த உச்சி மாநாடு முக்கியத்துவம் பெறுகிறது. இதில், ரஷியாவிடம் கச்சா எண்ணெய் வாங்கியதற்காக, 25 சதவீத கூடுதல் வரி விதிக்கப்பட்டு உள்ளது. இந்நிலையில், 7 ஆண்டு இடைவெளிக்கு பின்னர் சீனா சென்றுள்ள பிரதமர் மோடியின் பயணம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக பார்க்கப்படுகிறது.

## பிராட்மேன் தொப்பி ரூ 2.53 கோடிக்கு ஏலம்

பிராட்மேன் பயன்படுத்திய தொப்பி ரூ. 2.53 கோடிக்கு ஏலம் போனது.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் ஜாம்பவான் மறைந்த பிராட்மேன். டெஸ்டில் இவரது ரன் சராசரி 99.94 ஆக இருந்தது. கடந்த 1946-47ல் இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் மோதிய ஆஷஸ் டெஸ்ட் தொடர் நடந்தது. பிராட்மேன் தலைமையிலான ஆஸ்திரேலிய அணி 3-0 என தொடரை வென்றது. அப்போது அணிந்திருந்த பச்சை நிற தொப்பி, நேற்று முன்தினம் ஏலம் விடப்பட்டது. இதை அரசின் உதவியுடன், கான்பெரா தேசிய அருங்காட்சியகம், ரூ. 2.53 கோடி கொடுத்து வாங்கியது. பிராட்மேனின் 11 தொப்பியில், 9 தனியாரிடம் உள்ளன. 2 ஆஸ்திரேலிய அரசின் வசமானது. ஆஸ்திரேலிய கலைத்துறை அமைச்சர் டோனி பர்கே கூறுகையில்,'' பிராட்மேன் அணிந்திருந்த பச்சை நிற தொப்பியை, பார்வையாளர்கள் தேசிய அருங்காட்சியகத்தில் கண்டு ரசிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது,'' என்றார்.

## கால்பந்து: இந்திய அணி சாம்பியன்

7-வது ஜூனியர் மகளிர் தெற்காசிய கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டி (17 வயதுக்கு உட்பட்டோர்) பூட்டான் தலைநகர் திம்பில் நேற்று தொடங்கியது. இதில் பங்கேற்றுள்ள 4 அணிகள் தங்களுக்குள் தலா 2 முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதலிடத்தை பிடிக்கும் அணி சாம்பியன் பட்டத்தை கைப்பற்றும்.

இதில் இந்திய அணி தனது முதல் 4 ஆட்டங்களிலும் அபார வெற்றியை பதிவு செய்திருந்தது. இந்த சூழலில் இந்திய அணி தனது 5-வது ஆட்டத்தில் மீண்டும் நேபாளத்துடன் மோதியது. இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்திய அணி 5-0 என்ற கோல் கணக்கில் நேபாளத்தை பந்தாடி தொடர்ந்து 5-வது வெற்றியை ருசித்தது. அத்துடன் சாம்பியன் பட்டத்தையும் உறுதி செய்தது. இந்திய அணி தனது கடைசி லீக் ஆட்டத்தில் வங்காளதேசத்தை இன்று எதிர்கொள்கிறது.

## 4-வது சுற்றில் ரிபாகினா, ஜெசிகா ஜோடி

அமெரிக்க ஓபன் டென்னிஸ் நியூயார்க்கில் நடந்து வருகிறது. இதில் முன்னணி வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொள்கின்றனர். இந்நிலையில், பெண்கள் ஒற்றையர் பிரிவின் 3-வது சுற்றில் கஜகஸ்தானின் எலினா ரிபாகினா, பிரிட்டனின் எம்மா ராடுகானு உடன் மோதினார். இதில் அதிரடியாக ஆடிய ரிபாகினா 6-1, 6-2 என்ற செட் கணக்கில் எளிதில் வென்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு போட்டியில் அமெரிக்காவின் ஜெசிகா பெகுலா 6-1, 7-5 என்ற செட் கணக்கில் பெலாரசின் விக்டோரியா அசரென்காவை வீழ்த்தி நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

## விலகியது ஏன்..? விஜய் சங்கர் விளக்கம்

தமிழக அணிக்காக விளையாடிய கால கட்டங்களில் தான் அவர் இந்திய அணிக்கு விளையாட தேர்வானார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த சூழலில் தமிழக அணியிலிருந்து விலகியது ஏன்? என்பது குறித்து விஜய் சங்கர் தற்போது விளக்கமளித்துள்ளார்.

அதில், சில நேரங்களில், நீங்கள் அந்த முடிவை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கும்போது, முன்னேறி புதிய வாய்ப்புகளைத் தேட வேண்டும். நான் நன்றாக ஆடி வருவதாக நினைக்கிறேன். முக்கியமாக, நான் தொடர்ந்து ஆட விரும்புகிறேன், அவ்வளவுதான். பல வருடங்கள் ஆடிய பிறகு, வெளியே உட்கார்ந்து தண்ணீர் கொடுப்பது மிகவும் கடினம். கடந்த ரஞ்சிக்கோப்பையின் முதல் 2 போட்டிகளில் நான் நீக்கப்பட்டேன், பின்னர் மீண்டும் வந்தேன். சையத் முஷ்டாக் அலி கோப்பையில் கடைசி இரண்டு போட்டிகளில் மீண்டும் நீக்கப்பட்டேன். அப்போதிலிருந்தே கடினமான தருணங்கள் உருவாகின. ஒரு கட்டத்தில் உங்களுக்கு தெளிவு தேவை. எனக்கு அந்த தெளிவு கிடைக்கவில்லை. தேர்வாளர்களிடமிருந்து எந்த பாதுகாப்பு உணர்வும் எனக்கு கிடைக்கவில்லை. எனவே, ஒரு கட்டத்தில் நான் ஒரு முடிவு எடுக்க வேண்டியிருந்தது. குறைந்தபட்சம் எங்கள் பயிற்சியாளர் வந்து தேர்வாளர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று சொன்னது மகிழ்ச்சியாக இருந்தது. அதனால், இங்கு தொடர்ந்து இருப்பதில் அர்த்தமில்லை என்று உணர்ந்தேன். இந்த அமைப்பில் தொடர்ந்து போராடி ஆடுவது மிகவும் கடினமாக இருந்தது.

கடந்த மூன்று ஆண்டுகளை எடுத்துக்கொண்டாலும், 2022-ல் மட்டுமே நான் ஒரே பேட்டிங் வரிசையில் ஆடினேன், ஆனால், அதற்குப் பிறகு, 3-வது இடத்திலிருந்து 7-வது இடம் வரை எல்லா இடங்களிலும் ஆடினேன். இதற்கு எந்த விளக்கமும் எனக்கு கொடுக்கப்படவில்லை. ஆனால், இவை அனைத்தும் என்னை நேற்று ஒரு சிறந்த கிரிக்கெட் வீரராக உருவாக்கியுள்ளன'' என்று கூறினார்.

## மூப்பனார் நினைவுநாள்:
# தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி தலைவர்கள் மரியாதை

**சென்னை, ஆக. 31-**

காங்கிரஸ் மூத்த தலைவரும் தமாகா நிறுவனருமான ஜி.கே. மூப்பனாரின் நினைவுநாள் நேற்று கடைபிடிக்கப்பட்டது. தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள், அவரது நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

சென்னை தேனாம்பேட்டை, காமராஜர் அரங்கம் பின்புறம் அமைந்துள்ள ஜி.கே. மூப்பனாரின் நினைவிடத்தில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதையடுத்து, மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன், அ.தி.மு.க பொதுசெயலாளர் எடப்பாடி பழனிசாமி, பா.ஜ.க மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், பா.ஜ.க மூத்த தலைவர் தமிழிசை சௌந்தரராஜன், பா.ஜ.க முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை, ரவி பச்சமுத்து, தே.மு.தி.க துணை பொதுச் செயலாளர் எல்.கே. சுதீஷ் உள்ளிட்ட மலர் மரியாதை செலுத்தினர்.

தமிழிசை சௌந்தரராஜன் மூப்பனார் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய பின் செய்தியாளர்களிடம் கூறுகையில், மூப்பனார் பிரதமர் ஆவதை பலர் தடுத்தனர். அப்துல்காலம் பிரதமர் ஆவதை தடுத்தார்கள், தற்போது சி.பி.ராதாகிருஷ்ணன் வருவதை தி.மு.க விரும்பவில்லை, தமிழருக்கு தி.மு.க ஆதரவு அளிக்காததில் இருந்தே இவர்களது பொய் முகம் கிழிக்கப்பட்டுள்ளது. ஒரே மேடையில் அ.தி.மு.க., பா.ஜ.க., தே.மு.தி.க. உள்ளிட்ட அனைத்து கூட்டணி கட்சியினர் வந்திருந்தது தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி அமையும், ஒரு ஆட்சி மாற்றம் ஏற்படும் என்பதற்கு ஒரு அடித்தளம் என்று கூறினார். தன்னலமற்ற தலைவராக விளங்கியவர் ஐயா மூப்பனார் அவர்கள். பெருந்தலைவர் காமராஜர் வழியில், தனது அரசியல் பாதையை அமைத்துக் கொண்டவர். தூய்மையான அரசியல் தலைவராக விளங்கியவர் என்று தமிழக பா.ஜ.க. மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை கூறியிருக்கிறார்.

# அரசுப் பேருந்துகளில் ஒட்டப்பட்டுள்ள விளம்பரங்களை அகற்றக்கோரி வழக்கு

**சென்னை, ஆக. 31-**

அரசு பேருந்துகளில் கண்ணாடிகள், ஜன்னல் கண்ணாடிகளில் ஒட்டப்பட்டுள்ள விளம்பரங்களை அகற்றக் கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டம், ராசிபுரத்தைச் சேர்ந்த பாஸ்கர் என்பவர் தாக்கல் செய்த மனுவில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில், கண்ணாடிகளிலும், ஜன்னல் கண்ணாடிகளிலும் விளம்பரங்கள் ஒட்டப்பட்டுள்ளன. இது, வெளியில் இருந்து பேருந்துகளுக்குள் பார்க்க முடியாதபடி உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். இது, பேருந்துகளில் பயணிக்கும் பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட பயண்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது. அனைத்து வாகனங்களின் கண்ணாடிகள், ஜன்னல் கண்ணாடிகளில் கருப்பு தாள்கள் உள்ளிட்டவற்றை ஒட்டுவதை தவிர்க்க வேண்டும் என உச்ச நீதிமன்றம், 2011-ம் ஆண்டு உத்தரவிட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை கருத்தில் கொள்ளாமல், அரசுப் பேருந்துகளில் விளம்பரங்கள் ஒட்டியுள்ளது, நீதிமன்ற அவமதிப்பு செயல். இது மோட்டார் வாகன சட்ட விதிகளுக்கு முரணானது என்றும் தெரிவித்துள்ளார். மும்பை தாக்குதல், நிர்பயா பாலியல் வன்கொடுமை சம்பவங்களை சுட்டிக்காட்டி, அரசு பேருந்துகளில் கண்ணாடிகள், ஜன்னல் கண்ணாடிகளில் ஒட்டப்பட்டுள்ள விளம்பரங்களை அகற்ற உத்தரவிட வேண்டும் என மனுவில் கேட்டுக் கொண்டுள்ளார். இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி சுந்தர்மோகன் அமர்வு, இந்த விவகாரத்தில் உச்ச நீதிமன்ற உத்தரவு உள்ளிட்ட விதிகளை அமல்படுத்த எடுத்த நடவடிக்கை குறித்து அறிக்கை அளிக்க தமிழக அரசுக்கு உத்தரவிட்டு, விசாரணையை இரண்டு வாரங்களுக்கு தள்ளிவைத்துள்ளது.

## திருத்தணி அருகே
# சீமான் தலைமையில் மரங்கள் மாநாடு

**திருத்தணி, ஆக. 31-**

நாம் தமிழர் கட்சியின் சுற்றுச்சூழல் பாசறை சார்பில் மரங்களோடு பேசுவோம், மரங்களுக்காகப் பேசுவோம் என்ற தலைப்பில் திருத்தணி அருகே அருங்குளம் கிராமத்தில் மரங்களின் மாநாடு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. சமீபத்தில் மாநாடு நடைபெறும் இடத்தை நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்த நிலையில் அருங்குளம் கிராமத்தில் நாம் தமிழர் கட்சி சார்பில் சீமான் தலைமையில் நேற்று மரங்களின் மாநாடு நடந்தது. மாநாட்டில் கட்சி நிர்வாகிகள், பொது மக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். இதில் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம், நம்மாழ்வார், சுந்தர்லால் பகுகுணா, மிரா அல்பாசா, வங்காரி மாத்தாய், நடிகர் விவேக் ஆகியோர் படங்களுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். அவர்களின் நினைவாக மரக்கன்றுகளை நட்டார். மேலும் சுற்றுச்சூழல் உறுதிமொழியை வெளியிட்டார். மாநாட்டு ஏற்பாடுகளை செய்தவர்களுக்கு புத்தகங்கள் கொடுத்து சீமான் பாராட்டினார். மரங்கள் தொடர்பான கவிதை புத்தகங்களை சீமான் வெளியிட்டார். பின்னர் மரங்களோடு பேசுவோம்; மரங்களுக்காக பேசுவோம் என்ற தலைப்பில் பேசினார்.

# ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 14 ஆயிரம் கனஅடியாக உயர்வு

**தருமபுரி, ஆக. 31-**

கர்நாடகத்தில் தென் மேற்கு பருவமழை 15 நாட்கள் முன்கூட்டியே அதாவது மே மாதத்தின் மத்தியில் தொடங்கி பெய்து வருகிறது. இந்த ஆண்டு நல்ல மழை பெய்வதால் ஏரி, குளங்கள், நீர்நிலைகள், அணைகள் நிரம்பி வழிகின்றன. கடந்த ஒரு வாரமாக மழை குறைந்திருந்த நிலையில் தற்போது மழை மீண்டும் வெளுத்து வாங்க தொடங்கியுள்ளது.

இதன் காரணமாக அங்குள்ள கிருஷ்ணராஜசாகர் (கே.ஆர்.எஸ்.), கபினி அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. பாதுகாப்பு கருதி இந்த இரு அணைகளில் இருந்து தமிழக காவிரி ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது. இந்த நிலையில் தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கு நேற்று முன்தினம் 8 ஆயிரம் கனஅடியாக வந்த நீர்வரத்து இன்று காலை 8 மணி நிலவரப்படி நீர்வரத்து 14 ஆயிரம் கன அடியாக அதிகரித்து உள்ளது. இதனால் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்தருவி உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. இதனால் சுற்றுலா பயணிகள் பரிசல் பயணம் செய்து காவிரி ஆற்றின் அழகை ரசித்தனர். பின்னர் அவர்கள் மெயின் அருவியில் குளித்து மகிழ்ந்தனர். மீன் சாப்பாடு வாங்கி கொண்டு பூங்காவில் அமர்ந்து சாப்பிட்டனர். மேலும் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இதனால் காவிரி ஆற்றில் நீர்வரத்தை தமிழக-கர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

## கால்நடை பல்கலைக்கழகத்துடன்
# தேசிய திறந்தநிலை தொழிற்கல்வி படிப்பு அறிமுகம்

**சென்னை, ஆக. 31-**

மத்திய கல்வி அமைச்சகத்தின்கீழ் இயங்கும் தேசிய திறந்தநிலை பள்ளி நிறுவனம் பள்ளிக்கல்வியை தொலைநிலை வழியில் பயிற்றுவித்து வருகிறது. அதனுடன், திறன் மேம்பாட்டுக்கான தொழிற் படிப்புகளையும் வழங்குகிறது. அந்த வகையில் நாடு முழுவதும் சுமார் 24 லட்சம் மாணவர்கள் இதன் வாயிலாக பலன்பெற்று வருகின்றனர். இந்நிலையில் தேசிய திறந்த நிலை பள்ளி நிறுவனம் – தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சேர்ந்து 4 தொழிற்கல்வி படிப்புகளை அறிமுகம் செய்துள்ளன. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் என்.ஐ.ஓ.எஸ். தலைவர் அகிலேஷ் மிஷ்ரா, பல்கலை. பொறுப்பு துணைவேந்தர் நரேந்திரபாபு சென்னையில் கையெழுத்திட்டனர்.

இதுகுறித்து என்ஐஓஎஸ் தலைவர் அகிலேஷ் மிஷ்ரா கூறியதாவது: தேசிய திறந்த நிலை பள்ளி நிறுவனத்தில் 10-ம் வகுப்புக்கு 39 பாடங்கள் வழங்கப்படுகின்றன. இவற்றை தமிழ் உட்பட 19 மொழிகளில் மாணவர்கள் படிக்கலாம். பிளஸ் 2 வகுப்புக்கு 44 பாடங்கள் வழங்கப்படுகின்றன. இந்த பாடங்கள் இந்தி, ஆங்கிலம் உட்பட 7 மொழிகளில் வழங்கப்படுகின்றன. இந்தாண்டு இறுதிக்குள் தமிழ் மொழி கல்வி 12-ம் வகுப்பிலும் கொண்டு வரப்படும். இந்த கல்வி நிறுவனத்தின் 10 மற்றும் 12-ம் வகுப்பு சான்றிதழ்கள் அரசுப்பணி, உயர்கல்விக்கு தகுதியானவைகளாகும்.

ஆண்டுதோறும் ஏப்ரல்–மே மற்றும் அக்டோபர்–நவம்பர் என இருமுறை பொதுத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. அதனுடன், மாணவர்கள் விரும்பினால் இடைப்பட்ட காலத்திலும் பொதுத் தேர்வுகளை எழுதலாம். விருப்பமான பாடங்களை மாணவர்களே தேர்வு செய்ய வாய்ப்பு அளிக்கப்படுவதுடன், தாய்மொழிகளிலும் தேர்வை எழுதவும் அனுமதி வழங்கப்படுகிறது. நீட், ஜேஇஇ உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகளை எழுதும் மாணவர்களுக்கு இது மிகச்சிறந்த வாய்ப்பாக அமையும். சாமானிய, எளிய பின்னணயை கொண்ட மாணவர்களும் இவற்றை பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

தற்போது தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலை,யுடன் இணைந்து கோழி வளர்ப்பு, மண்புழு உரம் தயாரிப்பு தொடர்பான 2 சான்றிதழ் படிப்புகளும், உணவு மற்றும் பானம் தயாரிப்பு, பேக்கரி மற்றும் மிட்டாய் தயாரிப்பு ஆகியவை தொடர்பான டிப்ளமோ படிப்புகளும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இதற்கான மாணவர் சேர்க்கை விரைவில் தொடங்கப்படும். அடுத்த கல்வி ஆண்டில் இவை அமலுக்கு வரும். இவ்வாறு அவர் கூறினார். இந்த நிகழ்வின் போது தேசிய திறந்தநிலை பள்ளி நிறுவனத்தின் இயக்குநர் (தொழிற் கல்வி) டி.என்.கிரி, சென்னை மண்டல இயக்குநர் வி.சந்தானம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



தேனி மாவட்டம் கண்டமனூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமினை கலெக்டர் ரஞ்ஜீத் சிங் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம் முடுவார்பட்டி ஊராட்சியில் அங்கன்வாடி மையத்தில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை அவர்களது உயரம், எடை மற்றும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவின் தரம் குறித்து கலெக்டர் பிரவீன்குமார் நேரில் ஆய்வு செய்தார்.



விருதுநகர் மாவட்ட உள்விளையாட்டு அரங்கத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் நடைபெற்று வரும் முதலமைச்சர் கோப்பை 2025-க்கான மாவட்ட அளவிலான சதுரங்க விளையாட்டு போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா தொடங்கி வைத்தார்.

## நத்தம் அருகே உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம்



**நத்தம், ஆக, 31**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே பண்ணுவார்பட்டி ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம் நடந்தது.

இதற்கு திமுக தெற்கு ஒன்றிய செயலாளர் ரத்தினக்குமார் தலைமை தாங்கினார். முன்னாள் எம்.எல்.ஏ ஆண்டி அம்பலம்,திமுக ஒன்றிய செயலாளர்கள் சேக்சிக்கந்தர் பாட்சா, பழனிச்சாமி,நகர செயலாளர் ராஜ்மோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

யூனியன் ஆணையாளர் கிருஷ்ணன் வரவேற்றார். இந்த முகாமில் மகளிர் உரிமை தொகை, மாற்றத்திறனாளிகள் நலத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, சமூகநலத்துறை, பிற்படுத்தபட்டோர் நலத்துறை,வீட்டுவசதி உள்ளிட்ட 15 அரசு துறைகளின் சார்பில் பொதுமக்களிடம் இருந்து மனுக்கள் பெறப்பட்டது.

முகாமில் தாசில்தார் ஆறுமுகம், வட்டார வளர்ச்சி அலுவலர் ரவீந்திரன், திமுக மாநில பொதுக்குழு உறுப்பினர் முத்துகுமார்சாமி உள்ளிட்ட அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பரப்பலாறு வனப்பகுதியில் பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு முகாம்



**ஒட்டன்சத்திரம். ஆக...31**

. திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒன்றியம் வடகாடு ஊராட்சி பரப்பலாறு அணைப்பகுதியில் பகுதியில் தமிழ்நாடு வனத்துறை மற்றும் கிருபா பவுண்டேசன் இணைந்து நடத்திய பிளாஸ்டிக் ஒழிப்புணர்வு விழிப்புணர்வு முகாமில் வனப்பகுதியில் மாசடைவதற்கு காரணமான பிளாஸ்டிக் பொருட்கள், கண்ணாடி பாட்டில்கள் உள்ளிட்டவைகளை அகற்றப்பட்டது இந்நிகழ்வில்உதவி வன பாதுகாப்பு அலுவலர் வேலுமணி நிர்மலா, வனசரக அலுவலர் ராஜா, வனவர் சின்னத்துரை, வடகாடு விவசாய சங்க தலைவர் தங்கதுரை, கிருபா பவுண்டேசன் இயக்குனர்கள் சிவக்குமார், சுஜாதா, ஊராட்சி செயலர் சிவக்குமார் தன்னார்வலர்கள், வனத்துறையினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## பரமக்குடியில் இந்து முன்னணி சார்பில் 32- வது ஆண்டு விநாயகர் ஊர்வலம்



**பரமக்குடி, ஆக 29 :**

நாடு முழுவதும் விநாயகர் சதுர்த்தி விழா நேற்று முன்தினம் சிறப்பாக கொண்டாடப் பட்டது.இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் இந்து முன்னணி சார்பில் 32-வது ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழாவில் விநாயகர் சிலை ஊர்வலம் நேற்று மாலை நடந்தது.

பரமக்குடி கிருஷ்ணா தியேட்டர் பகுதியிலிருந்து புறப்பட்ட ஊர்வலத்திற்கு பரமக்குடி இந்து முன்னணி மாவட்ட செயலாளர் எஸ்.வீரபாண்டியன் தலைமை தாங்கினார்.

இந்து முன்னனி மாநில பேச்சாளர்கள் கெங்காதரன், ரெத்தினசபாபதி, மாவட்ட பொருளாளர் ஆதித்தன் மற்றும் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.நகர் தலைவர் குமரன் அனைவரையும் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக இந்து முன்னனி கன்னியாகுமரி கோட்டச் செயலாளர் கண்ணன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து பரமக்குடி பகுதியில் பிரதிஷ்டை செய்யப்பட்ட 44 விநாயகர் சிலைகள் ஊர்வலமாக நகரின் முக்கிய வீதிகளின் வழியாக கொண்டு செல்லப்பட்டன.பின்பு, பெருமாள்கோயில் படித்துறையில் வைகை யாற்றில் விநாயகர் சிலைகள் கரைக்கப்பட்டன.இந்து முன்னணி பொறுப்பாளர்கள்,நகரில் முக்கிய பிரமுகர்கள்,நகர் மன்ற உறுப்பினர்கள்,பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.இந்து முன்னனி துணைத் தலைவர் விஜயகுமார் நன்றி கூறினார். ஊர்வலத்தை முன்னிட்டு பரமக்குடி கோட்டாட்சியர் சரவண பெருமாள், வட்டாட்சியர் வரதன், காவல்துறை கூடுதல் துணை கண்காணிப்பாளர் பாலச்சந்திரன்,பரமக்குடி காவல்துறை துணை கண்காணிப்பாளர் சபரிநாதன் தலைமையிலான காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

## வெற்றி விநாயகர் கோவிலில் திருவிளக்குபூஜை



**நத்தம், ஆக, 31**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே புதுப்பட்டி வெற்றி விநாயகர் கோவிலில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு திருவிளக்கு பூஜை நடந்தது. முன்னதாக விநாயக பெருமானுக்கு சிறப்பு அபிஷேகங்களும், தீபாராதனைகளும், பூஜைகளும் நடந்தது. தொடர்ந்து கோவில் வளாகத்தில் உலக நன்மை வேண்டி திருவிளக்கு பூஜை நடந்தது.இதில் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. இதைப்போலவே மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள பெரிய விநாயகர் கோவிலிலும், செல்லம்புதூர் செல்வ விநாயகர் கோவிலிலும் திருவிளக்கு பூஜைகள் நடந்தது. இங்கும் பெண்கள் கலந்து கொண்டனர்.

## அருப்புக்கோட்டை அருகே மல்லாங்கிணறு கிராமத்தில் ஸ்ரீ ஐஸ்வர்ய மஹா கணபதி கோயில் ப்ராண பிரதிஷ்டை



**அருப்புக்கோட்டை ஆக.31.**

அருப்புக்கோட்டை அருகே மல்லாங்கிணறு கிராமத்தில் சீட்ஸ் உழவர் உற்பத்தியாளர் நிறுவன வளாகத்தில் நெய்யாற்றங்கரை ஸ்ரீ காசிலிங்க குருசாமி, அருள்மிகு ஸ்ரீ ஐஸ்வர்ய மஹா கணபதி ப்ராண பிரதிஷ்டை கும்பாபிஷேக விழா நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து வியாழக்கிழமை மாலை யாகசாலை பூஜை டாக்டர் ஹரிஹரசுப்பிரமணியன் ஐயர் தலைமையில் நடைபெற்றது. பின்னர் முதற்காலை யாக சாலை பூஜை, மகா கணபதி ஹோமம், யந்திர ஸ்தாபனமும், வெள்ளிக்கிழமை காலை இரண்டாம் கால யாகசாலை பூஜை, 108 கொப்பரை தேங்காய் மூல மந்திர ஹோமம், நாடி சந்தானம், பூர்ணாஹூதி, தீபாரதனை யாத்திராதானம் நடைபெற்றது. அதனை தொடர்ந்து யாக சாலையில் உள்ள புனித நீரை சிவாச்சாரியார்கள் ஸ்ரீ ஐஸ்வர்யா மகா கணபதிக்கு மகா கும்பாபிஷேகம் செய்தனர். தொடர்ந்து மகாதீபாரதனை, யாத்ரா தானம் நடைபெற்றது. தொடர்ந்து 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை சீட்ஸ் இயக்குனர்கள் ஜெய கண்ணன், செந்தில் மற்றும் குழுமம் நிர்வாகிகள் சிறப்பாக செய்ய இருந்தனர்.

## ஒட்டன்சத்திரத்தில் மரக்கன்று நடும் விழா



**ஒட்டன்சத்திரம்.ஆக.31.**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் தூய்மை இந்தியா திட்டம் மற்றும் நகர்ப்புற பசுமையாக்குதல் திட்டத்தின் கீழ் குழந்தை வேலப்பர் கோவில் கிரிவலப்பாதை பகுதிகளில் மரக்கன்றுகள் நடும் விழா நகர் மன்ற தலைவர் திருமலைச்சாமி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், இந்நிகழ்வில் சுப்பிரமணிய பிரபு, சுகாதார ஆய்வாளர் ராஜமோகன் உள்ளிட்ட சுகாதார பணியாளர்கள் நகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## காரியாபட்டியில் அலைகடலென அ.தி.மு.க. தொண்டர்கள் திரண்டு வர அருப்புக்கோட்டை நகரச் கழக செயலாளர் சோலை.சேதுபதி அழைப்பு

**அருப்புக்கோட்டை ஆக.31.**

அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தமிழகம் முழுவதும் மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம் சூறாவளி சுற்றுப்பயணம் செய்து திமுக அரசின் மக்கள் விரதப் போக்கை தமிழக முழுவதும் தோலுரித்து எழுச்சி உரையாற்றி வருகிறார்.

இந்த பயணத்தின் ஒரு பகுதியாக திருச்சுழி சட்டமன்றத் தொகுதிக்கு நாளை 1ந் தேதி இரவு காரியாபட்டி பேருந்து நிலையம் முன்பு இரவு 8 மணி அளவில் எழுச்சி உரையாற்ற உள்ளார்.



அதனைத் தொடர்ந்து அருப்புக்கோட்டை நகர நிர்வாகிகள் அனைத்து பிற அணிகள் நிர்வாகிகள்,கட்சி தொண்டர்கள் அலைகிடலென திரண்டு காரியாபட்டியில் எழுச்சி உரையாற்றும் வருங்கால முதலமைச்சர் எடப்பாடியாரின் கரத்தை வலுப்படுத்துவோம் அனைவரும் வாரீர் வாரீர் என கேட்டுக்கொள்கிறேன். அருப்புக்கோட்டை அ.தி.மு.க. நகர கழக செயலாளர் சோலை.சேதுபதி.



மதுரை மாநகர மாவட்ட அ.தி.மு.க.செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூவின் தாயார் ஒச்சம்மாளின் 7- ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் ஆணிமுத்து,வில்லாபுரம்ராஜா,ஆர்.அண்ணாத்துரை,பா.குமார்,சக்திவிநாயகர்பாண்டியன், பைக்காராகருப்பசாமி,திரவியம்,எம்.ஜி.ராமச்சந்திரன்,முத்துவேல்,ஓட்டுரணிதிருமுருகன், விஜயகுமார்,கணேஷ்பிரபு,விபிஆர்செல்வகுமார்,கே.எஸ்.சுப்பு,கார்னர்பாஸ்கர்,எம்.ஏ.நாசர், பூக்கடை ஐயப்பன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## எலியார்பத்தி சுங்கச்சாவடியில் இன்று நள்ளிரவு முதல் கட்டண உயர்வு : வாகன ஓட்டிகள் அதிர்ச்சி

**திருமங்கலம்.அக்.31.**

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகேயுள்ள எலியார்பத்தி சுங்கச்சாவடியில் இன்று நள்ளிரவு முதல் கட்டண உயர்வு அமல் படுத்தப் படுவதால் வாகன ஓட்டிகள் பெரிதும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.



நாடு முழுவதிலும் உள்ள தேசிய நெடுஞ்சாலைகள், மத்திய அரசின் தேசிய நெடுஞ்சாலைத்துறையின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றது.நெடுஞ்சாலைகளின் பராமரிப்பு பணிகளுக்காக சுங்கக் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது.

இந்த சுங்க கட்டணமானது ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனங்கள் மூலம் சுங்கச் சாவடிகளில் இருந்து வசூல் செய்யப்படுகிறது. அதன்படி இலகுரக முதல் கனரக வாகனங்கள் வரை அனைத்து வாகனங்களுக்கும் அந்த வாகனங்களில் திறனுக்கேற்ப சுங்க கட்டணம் வசூல் செய்ப்படுகிறது.

அதன்படி 1992ம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட சுங்க சாவடிகளில் ஆண்டுதோறும் ஏப்ரல் 1ஆம் தேதி முதலும், 2008ம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட சுங்க சாவடிகளில் ஆண்டுதோறும் செப்டம்பர் 1ம் தேதி முதலும் கட்டணங்கள் உயர்த்தப் படுகிறது.

இதையடுத்து அரசின் வழக்கமான முறைப்படி செப்டம்பர் 1 (ஆகஸ்ட் 31 நள்ளிரவு 12 மணி) இன்று முதல் தமிழகத்தில் உள்ள குறிப்பிட்ட சுங்க சாவடிகளில் சுங்க கட்டணம் உயர்த்தப்படுகிறது. சுமார் 5 முதல் 7 சதவீதம் வரையில் இந்த சுங்கக் கட்டணம உயர்வு இருக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. இதன் மூலம் சுங்க கட்டணமானது ரூ.5 முதல் ரூ.150 வரையில் உயர்த்தப்பட வாய்ப்புகள் உள்ளது. அதன்படி தமிழகத்தில் விக்கிரவாண்டி, உளுந்தூர்பேட்டை, சமயபுரம், மதுரை எலியார்பத்தி, ஓமலூர் , ஸ்ரீபெரும்புதூர், வாலாஜா உள்ளிட்ட பகுதிகளில் இந்த சுங்கக் கட்டண உயர்வு இருக்கும் என கூறப்படுகிறது. ஏற்கெனவே அமெரிக்க 50 சதவீத வரி விதிப்பால் இந்திய பொருளாதாரம் திணறி வரும் நிலையில் எலியார்பத்தி சுங்கச்சாவடியில் சுங்க கட்டண உயர்வு அறிவிப்பினால் இலகு மற்றும் கனரக வாகன வரிமையாள்கள் அதிர்ச்சியடைந்து பெரும் அவதிக்கு ஆளாகி வருகின்றனர்.

## தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில், சீருடை பணியாளர்களுக்கு இலவசப் பயிற்சி வகுப்பு கலெக்டர் சுகபுத்ரா தகவல்

**விருதுநகர்.ஆக. 31.**

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் இரண்டாம் நிலைக் காவலர், இரண்டாம் நிலை சிறைக்காவலர் மற்றும் தீயணைப்பாளர்- 3644 பணிக்காலியிடங்களுக்கான தேர்வு அறிவிக்கை 02/2025, நாள் 21.08.2025 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

இத்தேர்வுக்கு விண்ணப்பித்திருக்கும் விருதுநகர் மாவட்ட தேர்வர்கள் பயன்பெறும் பொருட்டு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், விருதுநகர் சார்பாக இலவசப் பயிற்சி வகுப்புகள் 03.09.2025 (புதன்கிழமை) அன்று தொடங்கப்படவுள்ளது. இவ்வகுப்புகள் திறன் வாய்ந்த பயிற்றுநர்களை கொண்டு நடத்தப்படவுள்ளது. இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு இத்தேர்வுக்கு தேவையான பாடக்குறிப்புகள் இலவசமாக வழங்கப்படும். இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள விருப்பம் உடையவர்கள் https://forms.gle/dsWChcUm8coEtMZr8 என்ற கூகுள் பார்ம் மூலமாகவோ அல்லது விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நேரடியாக தெரிவிக்கலாம். மேலும், விவரங்களுக்கு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தினை studycirclevnr@gmail.com என்ற மின்னஞ்சல் வாயிலாவோ அல்லது அலுவலகத்திற்கு வந்து நேரடியாகவோ தொடர்புகொள்ளலாம். எனவே தேர்வுக்கு தயாராகும் தேர்வர்கள் இந்த பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா தெரிவித்துள்ளார்.



சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று அமைச்சர்கள்எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், அர.சக்கரபாணி ஆகியோர் சந்தித்து முதல்வர் 1.9.2025 முதல் சன்னரக நெல் குவிண்டால் ஒன்றிற்கு ரூ.2545- மற்றும் பொதுரக நெல் குவிண்டால் ஒன்றிற்கு ரூ.2500/- என்ற விலையில் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்படும் என்று ஆணையிட்டதற்கும், திராவிட முன்னேற்ற கழக தேர்தல் அறிக்கையில் ஒரு குவிண்டால் நெல்லிற்கு ரூ.2500- வழங்குவோம் என்று குறிப்பிட்டதை நிறைவேற்றியதற்கும் நன்றி தெரிவித்துக்கொண்டனர்.

# தி.மு.க. கூட்டணிக்கு புதிய வாக்காளர்கள் வந்து கொண்டிருக்கின்றனர்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி

சென்னை, ஆக. 31-

தி.மு.க. கூட்டணிக்கு புதிய கட்சிகள் வருகிறதோ இல்லையோ புதிய வாக்காளர்கள் வந்துகொண்டிருக்கின்றனர் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

“ஒருவாரகால பயணமாக ஜெர்மனி, இங்கிலாந்து நாட்டிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று புறப்பட்டு சென்றார்.

இந்த பயணத்தில் தமிழ்நாட்டை நோக்கி தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காகவும், புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

முன்னதாக வெளிநாடு கிளம்பும் முன் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த முதல்வர் ஸ்டாலின், “எதிர்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி இந்த வெளிநாட்டுப் பயணம் குறித்து விமர்சனம் செய்திருக்கிறார். அவரைப் பொறுத்தவரை அவருடைய பயணங்களைப் போலவே இதுவும் இருக்கும் என்று நினைக்கிறார். ஆனால் நான் கையெழுத்திட்ட அனைத்து ஒப்பந்தங்களும் நடைமுறைக்கு வந்துள்ளன.

தி.மு.க. கூட்டணிக்கு புதிய கட்சிகள் வருகிறதோ இல்லையோ புதிய வாக்காளர்கள் வந்துகொண்டிருக்கின்றனர்.

அதுதான் உண்மை. பீகாரில் தேர்தல் ஆணையம் செய்ததைப் போல, தமிழ்நாட்டில் யார் எப்படிப்பட்ட சதி செய்தாலும் அதை முறியடிக்கும் வல்லமை தமிழ்நாட்டுக்கு உண்டு. பீகாரிலும் கூட மக்களை எழுச்சிப் பெற வைக்க தேர்தல் ஆணையம் உதவி செய்திருக்கிறதா என்று தெரிவித்தார்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமையில் நேற்று சென்னை அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் மாவட்ட செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர்கள், முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# இ.பி.எஸ். தலைமையில் அ.தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம்

## 2026 தேர்தல் வியூகம் குறித்து ஆலோசனை

சென்னை, ஆக. 31-

அ.தி.மு.க.வின் மாவட்ட செயலாளர்கள் கூட்டம் அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில் 2026 சட்டமன்ற தேர்தல் வியூகம் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து அ.தி.மு.க. சார்பில் வெளியான செய்திக் குறிப்பில்,

“அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில், சென்னை, ராயப்பேட்டையில் உள்ள தலைமைக் கழக அலுவலகத்தில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், 2026-ல் நடைபெற உள்ள சட்டப்பேரவை தேர்தலையொட்டிய பணிகளை எவ்வாறு ஆற்ற வேண்டும் என்பது குறித்து, எடப்பாடி பழனிசாமி விரிவாக ஆலோசனை வழங்கினார்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2026 தேர்தலுக்கு தயாராகும் வகையில் ‘மக்களை காப்போம் தமிழகம் மீட்போம்’ என்ற பெயரில் எடப்பாடி பழனிசாமி 234 தொகுதிகளுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார்.

இந்தச் சூழலில், தேர்தல் எதிர்கொள்வதற்கு அடுத்த கட்டமாக மேற்கொள்ள வேண்டிய வியூகங்கள் குறித்து நேற்று ஆலோசனை நடத்தப்பட்டதாக அ.தி.மு.க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# ஏற்றுமதி துறைகளை பாதுகாத்திட...(1-ம் பக்க தொடர்ச்சி)

டாலராக இருக்கும். அதிகம் பாதிக்கப்படுபவை துணிநூல், இயந்திரங்கள், வைரம் மற்றும் நகைகள், வாகன உதிரிபாகங்கள் ஆகிய தொழில் துறைகளே.

இந்தத் துறைகளில் வேலை இழப்பு 13 சதவீதத்திலிருந்து 36 சதவீதம் வரை உயரும் என அஞ்சப்படுகிறது. கேள்விக்குறியாகும் கோடிக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரம். இந்தியாவின் துணிநூல் ஏற்றுமதியில் நாட்டிலேயே அதிகபட்சமாக 28 சதவீத பங்களிப்புடன் தமிழ்நாட்டின் துணிநூல் துறை கோடிக்கணக்கான குடும்பங்களைப் பாதுகாக்கிறது.

திருப்பூர் மாவட்டத்தில், துணிநூல் தொழிலாளர்களில் 65 சதவீதம் பேர் பெண்கள். பத்தாண்டுகளாக மக்கள் வாழ்க்கையை மாற்றிய சமூக -பொருளாதாரச் சூழல் இது. திருப்பூரே கடந்த ஆண்டு சுமார் ரூ.40,000 கோடி வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டியது. ஏற்றுமதியைத் தாண்டி, இந்தத்துறை நிறைய துணைத் தொழில்களை உருவாக்குகிறது – நிறைவு, போக்குவரத்து, பொதியிடல், இயந்திர உற்பத்தி என நாடு முழுவதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க சுங்க வரிகள் துணிநூல் துறையில் ஏற்படுத்தும் தாக்கம் மிகவும் கவலைக்கிடமானது. 50 சதவீத சுங்கவரியில், இந்தத் துறையின் சாத்தியமான இழப்பு ஏறத்தாழ 1.62 பில்லியன் டாலர் வரை இருக்கும் என எங்கள் மதிப்பீடுகள் காட்டுகின்றன. மேலும் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கானவர்களின் வேலைகள் உடனடியாக ஆபத்தில் உள்ளன. ஏற்றுமதி துறைகளைப பாதுகாத்திட மத்திய அரசு புதிய கொள்கையை வகுக்க வேண்டும்.

இவ்வாறு மு.க.ஸ்டாலின் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



சென்னை மாநகராட்சி தண்டையார்பேட்டை மண்டலத்தில் ரூ.6.85 கோடி மதிப்பீட்டில் கேப்டன் காட்டன் கால்வாயில் தூர்வாரி மிதவை கழிவுகளை அகற்றும் பணிகளை நேற்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே.சேகர்பாபு, மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# இதுவரை மொத்தம் 1.85 கோடி...(1-ம் பக்க தொடர்ச்சி)

மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு சாதனை படைக்கப்பட்டுஉள்ளது.

முதல்வரின் 51 மாத கால ஆட்சியில் இதுவரை மொத்தம் 1.85 கோடி மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு 44 ஆயிரத்து 777 கோடியே 83 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இதில் திராவிட மாடல் அரசு விவசாயிகளுக்கு வழங்கியுள்ள ஊக்கத் தொகை மட்டும் 2 ஆயிரத்து 31 கோடியே 29 லட்சம் ரூபாய் ஆகும்

முதல்வர் மு.க.ஸ்டாலின், அரும்பாடுபட்டு விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல்லில் ஒரு நெல்மணி கூட வீணாகக் கூடாது என்ற உன்னத லட்சியத்துடன் கொள்முதல் செய்யப்படும் நெல்லை திறந்தவெளியில் வைத்திடக் கூடாது என்பதற்காக 827 கோடியே 78 லட்சம் மதிப்பீட்டில் 7 லட்சத்து 33 ஆயிரத்து 350 மெட்ரிக் டன் கொள்ளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு வளாகங்களைக் கட்டிஉள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி நெல் கொள்முதல் விலையை தற்போது உயர்த்தியுள்ளது விவசாயிகளுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்துள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலினை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி இருவரும் நேற்று (சனிக்கிழமை) நேரில் சந்தித்து நெல் கொள்முதல் விலையை உயர்த்தி தந்து விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளமைக்காக நன்றி தெரிவித்தார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஒரு குவிண்டால் நெல் கொள்முதல் ரூ.2 ஆயிரம் உயர்வு: அமைச்சர் அறிவிப்பு

சென்னை, ஆக. 31-

ஒரு குவிண்டால் நெல் கொள்முதல் ரூ. 2 ஆயிரத்து 500 உயர்ந்துள்ளது என்று அமைச்சர் சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் செப்டம்பர் 1-ந்தேதி முதல் சன்னரக நெல் குவிண்டால் ஒன்றிற்கு ரூ.2 ஆயிரத்து 545 மற்றும் பொதுரக நெல் குவிண்டால் ஒன்றிற்கு ரூ.2 ஆயிரத்து 500 என்ற விலையில் விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்ய ஆணையிட்டுள்ளார். இதில் தமிழ்நாடு அரசின் ஊக்கத்தொகையாக குவிண்டால் ஒன்றிற்கு சன்னரகத்திற்கு ரூ.156-ம் பொதுரகத்திற்கு ரூ.131-ம் வழங்கப்படுகிறது. தி.மு.க. தேர்தல் அறிக்கையில் ஒரு குவிண்டால் நெல்லிற்கு ரூ.2 ஆயிரத்து 500 வழங்குவோம் என்று குறிப்பிட்டதை நிறைவேற்றியுள்ளோம் என்பதைத் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் வரலாற்றில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினின் பொற்கால ஆட்சியில் இதுவரை 2024-25 நெல் கொள்முதல் பருவத்தில் 47.97 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. 51 மாத கால ஆட்சியில் இதுவரை மொத்தம் 1.85 கோடி டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு ரூ.44 ஆயிரத்து 777.83 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு அரசின் ஊக்கத்தொகையாக மட்டும் ரூ.2 ஆயிரத்து 31.29 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2022-2023-ம் ஆண்டு முதல் செப்டம்பரிலேயே கொள்முதல் செய்யப்பட்டு வருவதுபோல் இந்த ஆண்டும் செப்டம்பர் 1-ந்தேதியில் இருந்து கொள்முதல் செய்யப்படும். ரூ.333 கோடியே 7 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட 4 லட்சத்து 3 ஆயிரத்து 350 டன் கொள்ளளவு கொண்ட 26 நவீன நெல் சேமிப்பு வளாகங்கள் முதல்-அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளன. இந்த ஆண்டு நெல்வரத்து அதிகமாக வரலாறு காணாத வகையில் இருந்தாலும் எதிர்பாராது அடிக்கடி மழை பெய்த போதும் நெல்மணிகள் மழையில் நனையாமல் காப்பாற்றப்பட்டுள்ளன. அதே போன்று வருகின்ற 2025-26 பருவத்தில் நெல் கொள்முதலைச் செப்டம்பர் 1-ந்தேதியில் இருந்து தொடங்கிட அனைத்து முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. தேவைப்படும் இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் விரைந்து திறந்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நெல் கொள்முதல் மையங்களில் இருந்து நேரடியாக அரிசி அரவை ஆலைகளுக்கு நெல்லை அனுப்பிடவும் சோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அனைத்து நெல் விவசாயிகளும் புதிய விலையில் நெல்லினை விற்றுப் பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஓய்வுபெறும் நாளில் அரசு ஊழியர்கள்...(1-ம் பக்க தொடர்ச்சி)

அதிகாரி தாமதப்படுத்தியிருப்பது தெரியவந்தால், அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கலாம். இந்த அறிவுறுத்தல்கள் அனைத்தும் லஞ்ச ஒழிப்புத் துறையின் விசாரணை, குற்ற வழக்குகளுக்குப் பொருந்தாது” என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த சூழலில் ஓய்வுபெறும் நாளில் சஸ்பெண்ட் செய்யும் நடைமுறை தொடர்ந்து வருவதாக அரசு ஊழியர்கள் அதிருப்தியை வெளிப்படுத்தி வந்தனர்.

இந்த நிலையில், ஓய்வு பெறும் நாளில் சஸ்பெண்ட் நடவடிக்கை கிடையாது என தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. அதன்படி ஓய்வுபெறும் நாளில் இனி அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மீதான சஸ்பெண்ட் நடவடிக்கை இருக்காது. அதற்கான விதிகளில் திருத்தம் செய்து தமிழ்நாடு அரசு இந்த அரசாணையை வெளியிட்டு உள்ளது.

# ஜப்பானில் புல்லெட் ரயிலில் பயணம் செய்த பிரதமர் மோடி

டோக்கியோ, ஆக. 31-

பிரதமர் மோடி 2 நாள் பயணமாக நேற்று முன்தினம் ஜப்பான் நாட்டுக்கு சென்றார். ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடந்த இந்தியா-ஜப்பான் வர்த்தக மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்று பேசினார்.இதையடுத்து இந்தியா-ஜப்பான் இடையே தொழில்நுட்பம், பாதுகாப்பு, விண்வெளி ஆய்வு, போக்குவரத்து, பாதுகாப்பு துறை உள்பட பல்வேறு துறைகளில் 13 ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன.இதன் தொடர்ச்சியாக ஜப்பான் பிரதமர் ஷிகேரு இஷிபாவுடன் பிரதமர் மோடி பேச்சு நடத்தினார். ஜப்பான் நாட்டின் முன்னாள் பிரதமர்களையும் பிரதமர் மோடி சந்தித்து பேசினார். நேற்று முன்தினம் இரவு ஜப்பான் அரசு சார்பில் பிரதமர் மோடிக்கு விருந்து அளிக்கப்பட்டது. நேற்று பிரதமர் மோடி ஜப்பான் நாட்டில் 2-வது நாள் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

முதலில் ஜப்பான் நாட்டின் 16 மாகாண கவர்னர்களை டோக்கியோவில் பிரதமர் மோடி சந்தித்து பேசினார். இதைத் தொடர்ந்து நேற்று காலை பிரதமர் மோடி டோக்கியோவில் இருந்து சென்டாய் நகருக்கு புல்லட் ரெயிலில் பயணம் மேற்கொண்டார். அவருடன் ஜப்பான் பிரதமர் ஷிகேரு இஷிபா மற்றும் அதிகாரிகள் சென்றனர். சென்டாய் நகரில் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு கொடுக்கப்பட்டது. அங்கு உலக புகழ்பெற்ற புல்லட் ரெயில் தொழிற்சாலை மற்றும் பயிற்சி மையம் அமைந்து உள்ளது. அந்த பயிற்சி மையத்தில் புல்லட் ரெயில் இயக்குவதற்கான பயிற்சியை இந்தியர்கள் பெற்று வருகிறார்கள்.

இதை தொடர்ந்து ஜப்பான் பிரதமர் மற்றும் அதிகாரிகளிடம் விடை பெற்ற பிரதமர் மோடி நேற்று பிற்பகல் டோக்கியோவில் இருந்து சீனாவுக்கு புறப்பட்டுச் சென்றார். சீனாவில் பிரதமர் மோடி 2 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். சீனாவின் தியான்ஜின் நகரில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (எஸ்.சி.ஓ) உச்சிமாநாடு நடைபெற உள்ளது. பிரதமர் மோடி அந்த உச்சி மாநாட்டில் பங்கேற்க உள்ளார். 2018-ம் ஆண்டுக்கு பிறகு, பிரதமர் மோடி சீனாவுக்கு செல்வது இதுவே முதல் முறையாகும்.



மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூவின் தாயார் ஒச்சம்மாளின் 7-ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி அவரது உருவப்படத்திற்கு முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ., ஜெயந்தி ராஜூ, சௌமியா விஜயகுமார், ரம்யா கணேஷ்பிரபு, விபின்சாகர், விஷ்ணுசாகர், வருண்சாகர் ஆகியோர் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர்.